

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2052 கீழறை ஆண்டு கன்னி நல்லோரை புரட்டாசித் திங்கள் 4ம் நாள் (20-09-2021) நிறைமதி வெளியீடு +94 21 221 2739


**நந்திக்கொடி சைவக்கொடி**



சிவத்திரு.சி.தனபாலாவிற்கு 70 ஆவது அகவை வாழ்த்து

# நீத்தார் கடன் செய்யச் சிறந்த திதி நாள் பேரொடுக்க மறைமதி (மகாலயம்)

# இம்முறை புரட்டாசி 20 (அக் 6 2021) புதன்கிழமை அன்று நோற்கப்படும்

### மானிடப்பிறப்பின் சிறப்பு

**உரைசேரு மெண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனிபேதம்**
**நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா யங்கங்கே நின்றான்கோயில்**
**வரைசேரு முகின்முழவ மயில்கள்பல நடமாட வண்டுபாட**
**விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள் கையேற்கு மிழலையாமே**

என்ற திருஞானசம்பந்தர் சுவாமி அவர்களின் பாடலின் படி , 1.19x10-7 நிகழ்தகவில் தான் மனிதராக பிறக்கிறோம். இந்த மனிதப் பிறப்பென்பது ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு டன் கூடிய அருமையான இறைவனின் படைப் பாகும். இந்த ஆறாம் அறிவினை பயன்படுத்தி நிலையான இன்பம் (பேரின்பம்) , நிலையில்லாத இன்பம் (சிற்றின்பம்) போன்றவற்றினை பிரித்தறிந்து பேரின்பப்பெருவாழ்வினை அடையும் வழியினை கடைபிடித்து இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து மீண்டும் பிறப்பில்லா பெருவாழ்வினை அடைவதே பிறவிப்பயனாகும்.

இதனையே வள்ளுவரும்

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்**

ஒருவர் இல்லறத்தில் வாழ்ந்துக்கொண்டு இருக்கும் பொழுது அவரால் தெய்வீக நிலையை அடைய முடியுமா என்ற கேள்விக்கு வள்ளுவர் அழகாகப் பதிலளித்துள்ளார் இந்தக்குறளில். ஒருவர் இல்லற வாழ்க்கையில் வாழ்வதற்கான அடிப்படை நெறிகளை கடைப்பற்றி நெறி தவறாது வாழ்ந்தால், அதாவது தமிழ் வேதங்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற அடிப்படையில் அறவழி நின்று பொருளீட்டி இன்பமாக வாழ்ந்து வீடுபெறுதல் என்ற வாழ்க்கை முறையினை கடைப்பிடித்து வாழ்ந்தால் அவர் வானுறையும் தெய்வத்துக்கு நிகராக வைக்கப்படுவர் என்பது பொருள்.

அவ்வாறு வாழ்வாங்கு வாழ்ந்து வானுறைந்த வர்களுக்கு அவர்களின் திதியில் அல்லது பொதுத் திதியாகிய புரட்டாசி மறைமதியில் விரதமிருந்து படையலிட்டு மற்றவர்களுக்கும் தானம் மற்றும் உணவளித்து எங்கள் வாழ்வினை வளப்படுத்திக் கொள்வோம்.

### மறைமதி (அமாவாசை) தினத்தில் தென் புலத்தார் வழிபாடு மற்றும் பேரொடுக்கம் (மகாலய அமாவாசை)

வருடத்தில் சுறவத்திங்கள் மறைமதிப் பிறைநாள் (தை அமாவாசை) மற்றும் கடகத்திங்கள் மறைமதிப் பிறைநாள் ( ஆடி அமாவாசை) முக்கியமான நாட்களாகும். இத்தினத்தில் விரதமிருந்து , நீர் நிலைகளில் அல்லது கிணற்றில் நீராடி இறந்த வர்களுக்கு வழிபாடு செய்வது சிறப்பானதாகும். அத்துடன் எள்ளுடன் தர்ப்பை புல் சேர்த்து, நீர் இறைத்து , பிண்டம் வைக்கக்கூடியவர்கள் பிண்டம் வைத்து வழிபாடு செய்யலாம். (அண்டத்தில் இருப்பது பிண்டத்தில் இருக்கும் என்பார் கள்).

அத்துடன் ஆண்டுபிறைநாளாக அல்லது ஆண்டுத்திதியாக மற்றும் திங்கள் (மாத) பிறைநாளில் அல்லது திதியில் தென்புலத்தார் வழிபாடு செய்ய முடியாதவர்கள், பலவருடங்களாக செய்யாமல் விட்டவர்களுக்கு ஒரு சிறப்பான செய்தி. கவலையைவிட்டு கன்னி நல்லோரை புரட்டாசி மாதம் வருகின்ற மறைமதிப் பிறைநாள் (புரட்டாசி அமாவாசை) தினத்தன்று இந்த வழிபாட்டினை செய்யலாம். முன்னர் குறிப்பிட்டது போல கதிரவனின் தென்புலப்பயணம் தூய்மைப்படுத்துவதற்கானது (ஒடுக்க காலம்), ஆகவே இந்த மறைமதிப் பிறைநாள் மேலும் சிறப்பு பெறுகிறது. அத்துடன் இந்தக் காலப்பகுதியில் எம்முன்னோர்கள் பூமிக்கு வந்து எமது வழிபாட்டினை மற்றும் படையலை ஏற்கின்றனர் என்றும் கருதப்படுகிறது. அதற்கும் மேலாக அவர்களுக்கு அருளூட்டும் வகையில் நாங்கள் வழிபாடுகள், சிவபூசை, சிவமங்கல நீராட்டு, சிவப்பெருவேள்வி, அடியாருக்கு அமுது, மற்றைய உயிரினங்களுக்கு உணவு, பசுவுக்கு உணவு, காக்கைக்கு உணவு படைத் தல் போன்றவற்றினை செய்து பலன்களை பெறலாம்.

இந்நாளில் அனைவரும் விரதமிருந்து சிவனை வழிபட்டு, எங்கள் முன்னோர்களையும் வணங்கி அவர்களின் அருளாசிகளைப் பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழ வழிசமைப்போம். பெற்றோரின் அல்லது உறவினர்களின் திதி தெரியாதவர்களும் இந்நாளில் விரதமிருந்து பிதிர்க் குற்றங் களில் (பித்துரு தோஷம்) இருந்து விடுதலை பெறலாம்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**



பவானி கூடுதுறை




மாமகம் - கும்பகோணம்



திருக்கேதீச்சரம் - பாலாவித் தீர்த்தம்

## கோவிட் தீநுண்மிப் பரவல் காலத்தில் சிவப்பேறு அடைந்தவர்களுக்குரிய வழிபாடு




கோவிட் தீநுண்மிப் பரவல் மற்றும் பயணத்தடை காலத்தில் இறந்தவர்களுக்கு இறுதிச் சடங்குகள் செய்ய இயலாதவர்கள் வீட்டில் இருந்தே வழிபட்டு, இறந்த வர்களின் உயிருக்கு ஈடேற் றம் கொடுக்கும் செந்தமிழ் ஆகம திருமுறை வழிகளை தென்னாடு சிவமடம் வெளியிட்டிருக்கிறது. அத்துடன் அவர்களின் அடுத்த திதிநாள் வரைக்கும் ஓதவேண்டிய மற்றும் வழிபாடு ஆற்ற வேண்டிய முறைமைகளையும் இங்கே உள்ளடக்கி இருக் கிறோம்.

பக் 5.

## கோவிட் தீநுண்மிப் பரவலினால் சிவப்பேறு அடைந்தவர்களுக்கு பேரொடுக்கம் (மகாலய அமாவாசை) அன்று தென்புலத்தார் வழிபாடு

கோவிட் தீநுண்மிப் பரவலினால் சிவப்பேறு அடைந்தவர்களுக்கு, அவர்களின் உயிர் சிவபரம்பொருளின் பாதங்களில் நிலைபெறுவதற்கு அருளாசி வேண்டி பேரொடுக்க (மகாலய அமாவாசை) மறைமதிப் பிறைகளான புரட்டாசி 20 (அக் 6 2021) அன்று தென்னாடு ஐம்பூதநாதருக்கு சிறப்பு திருமஞ்சனம் மற்றும் பூசை வழிபாடுகள் இடம்பெறும். அதனை தொடர்ந்து அவர்களின் பெயரில் முத்திபேற்று செந்தமிழ் அர்ச்சனை நடைபெறும். அத்துடன் அவர்களுக்கு முத்திப் பேறு வேண்டித் சிவத்திரு.நவரத்தினம் பரந்தாமன் குழுவினரின் திருமுறை விண்ணப்பம் இடம்பெறும்.

## தென்னாடு தெய்வத்தமிழ் திங்கள் இதழின் ஓர் ஆண்டு நிறைது இன்று



திருமூல நாயனாரால் சிவபூமி என்று போற்றப்படும் இலங்கையின் வடபால் யாழ்ப்பாணம் கொக்குவில் பதியில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு மனோன் மணி அம்பாள் உடனுறை ஐம்பூதநாதர் திருக்கோயில் மற்றும் செந்தமிழ் ஆகம சிவமடத்தின், முதல் தெய்வத்தமிழ்த் திங்கள் இதழ் இம்முறை பன்னிரெண்டா வது இதழாக வெளிவருகிறது. கடந்த ஒரு ஆண்டு காலமாக கோவிட் தீநுண்மி காலப்பகுதியிலும் இடைவிடாது இலவச இதழாக வெளிவர இறையருள் கூட்டியிருந்தது. ஒத்துழைப்பு வழங்கிய மற்றும் இவ்விதழினை வாசித்துப் பயன்பெற்ற அனைத்து சிவனடியார்களுக்கும் நன்றிகள்.

# இலங்கைத் தமிழரின் குறிகாட்டியாக விளங்குகின்ற நல்லைக்கந்தன் பெருந்திருவிழா



சிவத்திரு யாழவன் சிவவேதன்

யாழ்ப்பாணத்தின் சைவசமயப் பெருங்கோயில் என்று சிறப்புப்பெறுவது நல்லைக்கந்தன் ஆலயம். சைவத்தின் பெருங்கோயிலாக தில்லை திகழ்வது போல ஈழத்துச் சைவப் பெருங்கோயிலாக திகழ்ந்து வரும் கோயில் நல்லூர்க்கந்தன் கோயில் என்றால் அது சற்றும் மிகையாகாது. ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணத்திலே நல்லை மூதூரிலே கோயில் கொண்டு எழுந்தருளி சைவத்தையும் தமிழையும் காப்பவனே நல்லைக்கந்தன். யாழ்ப்பாண இராச்சிய அரசர்களின் காலத்தில் இருந்து இன்று வரை ஈழமண்ணோடு இரண்டறக்கலந்து இருக்கின்றது இக்கோயில்.

இவ்வாலயத்தின் கருவறையில் திருவுருவுக்கு பதிலாக வேல் அமைக்கப்பட்டுள்ளது. இதனைச் சுற்றி பிள்ளையார் முதலான தெய்வங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாலயம் கிழக்கிலும், தெற்கிலும் வாசல்களைக் கொண்டுள்ளது. இவற்றின் மேல் பெருங்கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் தெற்குப் புறத்தில் உள்ள தீர்த்தக்கேணி நன்கு திட்டமிடப்பட்டு, படிக்கட்டுகளும் மண்டபங்களும் கொண்டதாய் அமைக்கப்பட்டுள்ளது. முருகனின் மூர்த்தங்களில் ஒன்றான தண்டாயுதபாணிக்கு அங்கு சிறு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் நான்கு பக்கங்களிலும் மடாலயங்கள் உள்ளன.

கூழங்கைத் தம்பிரான் பாடிய நல்லைக் கலிவெண்பா, இருபாலைச் சேனாதிராச முதலியாரின் நல்லை வெண்பா, நல்லையந்தாதி, நல்லைக் குறவஞ்சி, நல்லை நகர்க் கந்தன் பேரில் திருவூஞ்சல், திருநல்லூர்த் திருப்பள்ளியெழுச்சி, உடுப்பிட்டி சிவசம்புப் புலவரின் நல்லை கந்தசுவாமி விஞ்சதி, நல்லை சரவணமுத்துப் புலவரின் நல்லை வேலவருலா போன்ற ஈழத்து சைவத்தமிழ் இலக்கிய வரலாற்றின் பெரும்பாலான இலக்கியங்கள் நல்லைக்கந்தன் மீது பாடப்பட்டுள்ளன. பல படையெடுப்புக்கள், பல ஆக்கிரமிப்புக்கள், பல அனர்த்தங்கள் இக்கோயில் மீது இடம்பெற்றாலும் அவற்றைத் தாண்டியும் சைவர்களின் அயராத உழைப்பினாலும் முயற்சியாலும் வானுயர்ந்து எழுந்து நிற்கின்றான் நல்லைக்கந்தன். ஆறுமுகநாவலர், யோகர் சுவாமிகள் போன்ற ஈழத்துச் சைவக்காவலர்களுடன் தொடர்புபட்டிருக்கும் இக்கோயில் ஈழத்து வரலாற்றில் தவிர்க்க முடியாத பெருங்கூறு என்றே சொல்லிப்போகலாம்.

தினமும் அதிகாலை 4.30 மணிக்கு திருப்பள்ளியெழுச்சி பூசை இடம்பெறுகின்றமையும், மாலையில் பள்ளியறைப் பூசை இடம்பெறுகின்றமையும் இந்த ஆலயத்தின்





சிறப்புகளில் ஒன்றாகும். திருவிழா காலங்களில் மட்டுமல்லாமல் தினமும் மாலையில் முருகப் பெருமானை ஊஞ்சற் பாட்டுப்பாடி, அழகிய சிறு மஞ்சத்தில் ஏற்றி பள்ளியறையில் துயில்கொள்ளச் செய்வதும், மறு நாள் அதிகாலையில் திருநல்லூர்த் திருப்பள்ளியெழுச்சி பாடி, முருகனைத் துயிலெழுப்பி அதே சிறு மஞ்சத்தில் அழைத்து வந்து கருவறையில் அமர்த்துவதும் சிறப்பான மரபாகும்.

இங்கு, ஆவணி மறைமதி நாளினை (அமாவாசையைத்) தீர்த்தமாகக் கொண்டு, இருபத்தைந்து நாட்களுக்கு திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. ஆடி மறைமதியின் ஆறாம் நாள் கொடியேற்றத் திருவிழாவுடன் வருடாந்தத் திருவிழா ஆரம்பமாகிறது. பெருந்திருவிழாக் காலங்களில் மெய்யடியார்கள் காவடியாட்டம், காவடி எடுத்தல், தீச்சட்டியெடுத்தல், அங்கவலம் வருதல், அடியழித்தல், முதலான வேண்டுதல்களை நிறைவேற்றுவர்.

இக்காலத்தில் புராண படனம் செய்தல், சமயப் பிரசங்கம் செய்தல், திருமுறைகள் ஓதுதல், ஓதுவார்களை அழைப்பித்து ஓதுவித்தல் முதலான சமய நிகழ்ச்சிகள் மக்களின் ஆன்மீக மேம்பாட்டிற்காக நடத்தப்படுகின்றன.

இத்தகு சீரும், பெருஞ்சிறப்பும், ஒல்காப் புகழும், பழம்பெருமையும், அரும்புதுமையும் வாய்ந்த நல்லைக்கந்தனின் வருடாந்த திருவிழா ஆவணி மாதத்தில் வழமையாக நடைபெறும். திருவிழாக்காலம் ஆரம்பித்தாலே ஒட்டுமொத்த யாழ்ப்பாணமும் களை கட்டி விடும். சைவத்தின் அரும்பெரும் சிறப்பே அதன் வாழ்வியல் தான் என்பது மறுக்கப்பட முடியாத மறுக்க இயலாத விடயமாகும். ஊரெலாங்கூடி மகிழ்ச்சியில் களை கட்டி வீதி தோறும் இன்பம் பரவ, ஐயன் முருகனின் செம்மாந்த பெரும்புலமையை ஒட்டுமொத்த ஊரும் கொண்டாடித்தீர்க்கும். அவன் அருளுக்காகவும், அவனது அழகைக்கண்டு களிப்பதற்காகவும் மட்டுமல்ல சைவம் சார்ந்து இயங்கும் கலைகளை கண்டு இரசிப்பதற்காகவும், இளையோர் படை திரளும். இருபத்து ஐந்து நாட்களைக்கொண்ட நல்லைக்கந்தன் திருவிழாவின் போது அத்தனை நாட்களும் நல்லூர் அமரவுலகம் போல காட்சியளிக்கும்.

தினம் தினம் வண்ண வண்ண உடைகளுடனும், கண்களைக் கொள்ளை கொள்ளும் ஆபரணங்களுடனும் வாசம் வீசும் மலர் மாலைகளுடனும் நல்லைக்கந்தன் வீதியுலா வருவான். அதைப்பார்ப்பதற்காகவே ஒரு கூட்டம் திரளும் நல்லூரைச் சுற்றியுள்ள மண்டபங்களில் திருமுறை ஒதல் மற்றும் சைவச்சொற்பொழிவுகள் போன்றன இடம்பெறும்.

இத்தகு விதமாக செழிப்புற்றுத் திகழும் நல்லைத் திருவிழாவிற்கு பரவி வரும் தீநுண்மி பாதிப்பு விளைவித்தது. அடியவர்களின் மனங்களை கவலையடையச் செய்தது உண்மை தான். ஆனாலும் நல்லைக்கந்தன் இத்தகு இடர் நிலையிலும் மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் திருவிழாக்கண்டான் என்பதே பெருஞ்செய்தி. நாட்டின் இடர் நிலமையை கருத்தில் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்கள் புடை சூழ நல்லைக்கந்தன் வழமை போல் உலா வந்தான். உலகெங்கிலும் வாழுகின்ற அடியவர் நலனுக்காக நேரலை மற்றும் காணொளிகள் ஊடாக முருகவேளின் திருவிழாக்காட்சிகள் பகிரப்பட்டன. நல்லையனை நினைந்து, வீடுகளில் இருந்து, அடியார்கள் உளப்பூர்வமாக வழிபாடு இயற்றினர். நல்லைத்திருவிழாவின் பெருந்திருவிழா என்று அழைக்கப்படும் தேர்த்திருவிழாவில் முருகன் சிறிய தேரில் வேலவராக உலா வந்தான். முருகன் திருமணம், பூங்காவனம் என்பனவும் சிறப்பாக இடம்பெற்றன. என்றென்றும் மக்களின் துயர் தீர்த்து அவர்களுடன் நல்லை நாயகன் வாழ்வான்.

**அன்புபொருந் தடியவர்கள் வாழி வாழி!**
**அழகிய நல்லைச்சனங்கள் வாழி வாழி!**
**பொன்புரளு மஞ்ஞைக் குக்குடமும் வாழி!**
**புகழ் தெய்வக்குஞ்சரியும் குறமின் வாழி!**
**துன்புதவிர் வீரவேல் வாழி வாழி!**
**சொல்லுமற்று மாயுதங்கள் வாழி வாழி!**
**நன்குதரும் நல்லைநகர்க் கந்தர் வாழி!**
**நாதாந்த வேலவர் எந்நாளும் வாழி!**

**திருச்சிற்றம்பலம்**

# திருச்செந்தூர் முருகன் கோயில்

## அறுபடை வீடுகளில் இரண்டாவது வீடாகச் சிறப்பு பெற்றுத்திகழும் முருகத்தலம்

தமிழ் இருக்கும் இடமெல்லாம் முருகன் இருப்பான் முருகன் இருக்கும் இடமெல்லாம் தமிழிருக்கும் அல்லது குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான் அவன் பொற்பாத அடியினிலே மகிழ்விருக்கும் என்பது பழம்பெரும் முதுமொழி. பண்டை தொட்டு தமிழர்களின் பழம்பெரும் வழிபாட்டு பொருளாக திகழ்ந்து வருபவன் முருகன். இத்தகு முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டாவது வீடாக சிறப்பு பெற்றுத்திகழ்வது தான் திருச்செந்தூர். பண்டைய சங்கத்தமிழ் இலக்கியங்கள் கூட இக்கோயிலின் பெருமையை பறை சாற்றிப்போகின்றன. திருச்சீரலைவாய் என்பது இதன் பழமையான பெயர்.


தமிழ் நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில், மன்னார் வளைகுடாவை அண்டி அமைந்துள்ள இக்கோயில் சென்னையில் இருந்து 600 கி.மீ தொலைவில் உள்ளது. சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள இக்கோயில், 2000-3000 ஆண்டுகள் வரை பழமை கொண்டதாகக் கருதப்படுகின்றது. முருகப்பெருமானுக்குக் கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ள ஒரு கோயில் இதுவாகும்.

**“முருகன் தீம்புனல் அலைவாய்” - தொல்காப்பியம் (களவு சூத்23)**
**“வெண்டலைப் புனரி யலைக்குஞ் செந்தில்**
**நெடுவேல் நிலைஇய காமர் வியன்துறை” - புறநானூறு (பாடல் 55)**
**“திருமணி விளக்கினலை வாய்ச்செரு மிகுசேஎய்” - அகநானூறு (பாடல் 266)**
**“உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்” - திருமுருகாற்றுப்படை**
**“சீர் கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்” - சிலப்பதிகாரம்**

என்ற விதமாக பழந்தமிழ் இலக்கியங்கள் செந்தூர் முருகன் ஆலயத்தை சான்றுபடுத்திப் போகின்றன. முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளில் திருச்செந்தூர் மட்டும் கடற்கரையிலும், பிற ஐந்தும் மலைக்கோயிலாக அமைந்துள்ளது. 157 அடி உயரம் கொண்ட இக்கோயிலின் கோபுரம், ஒன்பது தளங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. முருகப்பெருமான் சூரனை ஆட்கொண்ட பின்பு, தனது வெற்றிக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகக் சிவபூசை செய்தார்.

இந்த கோலத்திலேயே முருகன் வலக்கையில் தாமரை மலருடன் அருளுகிறார். தலையில் சிவயோகி போல சடைமகுடமும் தரித்திருக்கிறார். இவருக்கு இடது பின்புற சுவரில் ஓர் இலிங்கம் இருக்கிறது. இவருக்கு முதல் தீபாராதனை





காட்டிய பின்பே, முருகனுக்குத் தீபராதனை நடக்கும். சண்முகர் சன்னதியிலும் சுவாமிக்குப் பின்புறம் இலிங்கம் இருக்கிறது. இவ்விரு இலிங்கங்களும் இருளில் உள்ளதால், தீபாராதனை ஒளியில் மட்டுமே காண முடியும். 1648 ஆம் ஆண்டு டச்சுப்படையினரால் இக்கோயில் கைப்பற்றப்பட்டது. இதன் போது அப்பகுதியை ஆண்ட திருமலை நாயக்கர் என்ற மன்னன் காப்பற்ற முயன்றும் முடியாமல் தோற்றார். கோயிலை கைப்பற்றிய டச்சுப் படையினர் அங்கிருந்த முருகன் நடராசர் சிலைகளை தங்கம் என நினைத்து கடத்திச் சென்றனர். செல்லும் வழியில் கப்பலில் வைத்து அதை உருக்க முற்பட்டனர். உருக்க முயலுகையில் பாரிய சூறாவளி வீசி கப்பல் நிலை குலைந்தது. இதனால் அந்தச்சிலைகளை கடலில் வீசி விட்டார்கள் இந்தச்சம்பவம் போர்த்துக்கேய இராணுவக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்பு ஐந்து வருடங்கள் கழித்து புதுச்சிலை செய்ய முற்பட்ட போது வடமலையப்பர் எனும் அடியவரின் கனவில் முருகன் தோன்றி தான் கடலில் இருப்பதாகக் கூறி அடையாளத்திற்கு எலுமிச்சைபழமும் கழுகும் இருக்கும் என்று கூறி மறைந்தான். அவர் படகில் சென்று தேடிய போது, ஓர் இடத்தில் எலுமிச்சை மிதந்தது. மேலே கழுகும் பறந்தது. அங்கு நீரில் மூழ்கிப்பார்த்த போது இரண்டு சிலைகளும் கிடைத்தன. பின்பு அதே முருகன் மீண்டும் எழுந்து அருள் பாலிக்கின்றார்.

**“கள்ளி முதுகாட்டில்ஆடி கண்டாய்**
**காலனையும் மகாலாற்கடந்தான் கண்டாய்**
**புள்ளியுழை மானின்தோலான் கண்டாய்**
**புலியுரிசேர் ஆடைப்புனிதன் கண்டாய்**
**வெள்ளி மிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய்**
**வெணீற்றான் கண்டாய் நம் செந்தில்மேய**
**வள்ளிமணாளற்குத் தாதை கண்டாய்**
**மறைக்காட்டுறையும் மணாளன்தானே.”**

எனும் அப்பர் பிரானின் தேவரமும்,

**“அந்தண்மறை வேள்வி காவற் கார**
**செந்தமிழ் சொல் பாவின் மாலைக் கார**
**அண்டரூப கார சேவற் கார முடிமேலே -**
**அஞ்சலிசெய் வோர்கள் நேயக் கார**
**குன்றுருவ ஏவும் வேலைக் கார**
**அந்தம்வெகு வான ரூபக் கார எழிலான்**
**சிந்துரமின் மேவு போகக் கார**
**விந்தைகுற மாது வேளைக் கார**
**செஞ்சொலடி யார்கள் வாரக் கார எதிரான -**
**செஞ்சமரை மாயு மாயக் கார**
**துங்கரண சூர சூறைக் கார**
**செந்திநகர் வாழு மாண்மைக் கார பெருமாளே..”**

எனும் அருணகிரிநாதரின் திருப்புகழும் இக்கோயிலை மேலும் தெள்ளத்தெளிவாக சான்று படுத்திப்போகின்றன.

இக்கோயிலில் கந்தன் கவின் அறுமை (கந்தசட்டி) விழா மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. முருகத் தலங்களில் கந்தன் கவின் அறுமை விழா ஆறு நாட்களே நடக்கும். சில தலங்களில் அறுமைக்கு அடுத்தநாள் முருகன் திருக்கல்யாணத்துடன் சேர்த்து ஏழு நாட்கள் நடத்துவர். ஆனால், திருச்செந்தூரில் கவின் அறுமை முதல் ஆறுநாட்கள் அறுமை விரதம், சூரன்போர் , ஏழாம் நாளில் முருகன், தெய்வானை திருமணம், அடுத்த 5 நாட்கள், சுவாமி திருக்கல்யாண கோலத்தில் ஊஞ்சல் சேவை என இவ்விழா 12 நாட்கள் கொண்டாடப்படுகிறது. கந்தசட்டி விழாவின் கடைசி நாளில், தங்கள் ஊர் பெண் தெய்வானையை திருமணம் செய்ததற்காகவும், போர் முடிந்து முருகனின் உக்கிரத்தை குறைக்கும் விதமாகவும் முருகன் மீது பத்தர்கள் மஞ்சள் நீரூற்றி விளையாடுகின்றனர்.

**“வேண்டுவோர் வேண்டுவதை நிறைவேற்றி அருள்வான் செந்தில் நகர் அரசாளும் வேலவப்பெருமான்.”**

**திருச்சிற்றம்பலம்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்

## அருள்மிகு அரும்பன்ன வனமுலை அம்மை உடனுறை சொன்னவாறு அறிவார் திருக்கோயில் - திருத்துருத்தி (குத்தாலம்)



சிவத்திரு
குமரேசன்
இராஜசிம்மன்

### தேவாரப் பாடல்பெற்ற சிவபுரங்களில் 100வது திருக்கோயில்


திருத்துருத்தி இறைவனை வழிபட்டால் முற்பிறவி அனுபவங்களை வெளிப்படுத்துவார் மற்றும் திருமணத் தடையை நீக்குவார்.

**அமைவிடம்: (மயிலாடுதுறை மாவட்டம் - தமிழ்நாடு)**

மயிலாடுதுறை - கும்பகோணம் சாலையில் மயிலாடுதுறையில் இருந்து 11 கி.மீ தொலைவிலும், கும்பகோணத்தில் இருந்து 24 கி.மீ தொலைவிலும் குத்தாலம் என்ற ஊரில் இத்தலம் அமைந்துள்ளது. திருவேள்விக்குடி, திருஎதிர்கொள்பாடி, திருமணஞ்சேரி ஆகிய பாடல் பெற்ற சிவத்தலங்கள், இத்தலத்திற்கு அருகாமையில் உள்ளன.

#### திருத்தலச் சிறப்பு

இத்தல இறைவன் தான்தோன்றி இலிங்கமாக காட்சி தருகிறார். இறைவனே இங்கு திருமணம் நடத்தியதால், இத்தலத்தில் வந்து வழிபட்டால் எப்பேர்ப்பட்ட திருமண தடையும் நீங்கிவிடும். இத்தலத்தை வணங்கினால் காசியில் வழிபட்ட புண்ணியம் கிடைக்கும். அக்கினி தேவர் தன் பழி தீர சுவாமியை வழிபட்டது இத்தலத்திலே ஆகும். தல விருட்சத்தின் அடியில் இறைவன் இத்தலத்திற்கு எழுந்தருளிய பாதுகை உள்ளது என்ற பெருமை இத்தலத்திற்கு உண்டு. சிவனின் தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில், இது 100வது தேவாரத்தலம் ஆகும். ஆயிரக்கணக்கான



வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட இத்திருக்கோயில் சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னர் சோழ மன்னர்களால் புனரமைப்புச் செய்யப்பட்டது.

பரத மாமுனிவர் தமக்கு குழந்தைப்பேறு வேண்டி செய்த யாகத்தில் தோன்றிய அரும்பன்ன வனமுலை அம்மை இத்தலத்தில் வழிபட்டு சிவபெருமானை திருமணம் செய்தால், திருமணத் திருத்தலம் எனப்படுகின்றது. தல திருமரமாக உத்தால மரம் இருக்கிறது. இதைக் கொண்டு உத்தால வனம் எனப்பட்ட இத்தலம் மருவி குத்தாலம் ஆயிற்று. திருமணத் திருத்தலம் என்பதால், அரும்பன்ன வனமுலை அம்மையை வழிபட திருமணத்தடைகள் நீங்கும் என்பது நம்பிக்கை.

**இறைவன் திருப்பெயர் :** சொன்னவாறு அறிவார் (உத்தவேதீசுவரர்), வீங்கு நீர் துருத்தி உடையார்
**இறைவியார் திருப்பெயர் :** அரும்பன்ன வளமுலையாள் (பரிமள சுகந்த நாயகி)
**கோயில்மரம் :** உத்தால மரம் (ஆத்தியில் ஒரு வகை)
**திருக்குளம் :** காவிரி தீர்த்தம், சுந்தர தீர்த்தம், தாமரைத் தீர்த்தம், வடகுளம்
**வழிபட்டோர் :** அம்பாள், காசிபன், ஆங்கிரசன், கௌதமன், மார்க்கண்டேயர், வசிட்டர், புலத்தியர், அகத்தியர், கதிரவன், பரத முனிவர்
**பாமாலை:** அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர்

**தலத்தின் மீது தேவார முதலிகளால் பாடப்பட்ட திருப்பதிகங்கள்**

#### திருஞானசம்பந்தர் பாடிய பதிகம்

ஓங்கிமேல் உழிதரும் ஒலிபுனற்
கங்கையை ஒருசடைமேற்
தாங்கினார் இடுபலி
தலைகலனாக்கொண்ட தம்மடிகள்
பாங்கினால் உமையொடும் பகலிடம்
புகலிடம் பைம்பொழில்சூழ்
வீங்குநீர்த் துருத்தியார் இரவிடத்
துறைவர்வேள் விக்குடியே.

#### அப்பர் பாடிய பதிகம்

பொருத்திய குரம்பை தன்னைப்
பொருளெனக் கருத வேண்டா
இருத்தியெப் பொழுதும் நெஞ்சுள்
இறைவனை ஏத்து மின்கள்
ஒருத்தியைப் பாகம் வைத்தங்
கொருத்தியைச் சடையில் வைத்த
துருத்தியஞ் சுடரி னானைத்
தொண்டனேன் கண்ட வாறே.



#### சுந்தரர் பாடிய பதிகங்கள்

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடிபடக் கரையொடுந் திரைகொணர்ந் தெற்றும்
அன்னமாங் காவிரி அகன்கரை உறைவார்
அடியிணை தொழுதெழும் அன்பராம் அடியார்
சொன்னவா றறிவார் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
என்னைநான் மறக்குமா றெம்பெரு மானை
என்னுடம் படும்பிணி இடர்கெடுத் தானை

மூப்பதும் இல்லை பிறப்பதும்
இல்லை இறப்பதில்லை
சேர்ப்பது காட்டகத் தூரினு
மாகச்சிந் திக்கினல்லாற்
காப்பது வேள்விக் குடிதண்
துருத்தியெங் கோன்அரைமேல்
ஆர்ப்பது நாகம் அறிந்தோமேல்
நாமிவர்க் காட்படோ மே.

#### திருத்தல வரலாறு

திருவாவடுதுறை தலத்தில் உமையம்மை பசு வடிவம் நீங்கப் பெற்று சுய உருவம் அடைந்ததும், சிவபெருமான் காட்சி அளித்தார். ஆனால் திருமணம் நடைபெறவில்லை. அம்மைக்கு இன்னொரு பணி காத்திருந்தது. அருகிலுள்ள குத்தாலத்தில் தவம் செய்து வந்த பரதமா முனிவருக்கு அவர் விரும்பியபடி, அம்மை, வேள்விக் குண்டத்தில் இறைவன் விருப்பப்படி, ஒரு பெண்ணாகப் பிறந்தார். இறைவனை திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு தினமும் காவிரிக்குச் சென்று நதியில் நடுவிலிருந்த மணல் மேட்டில் சிவலிங்கம் செய்து வழிபட்டு வந்தார். 8ம் நாள் இறைவன் அங்கு இலிங்க வடிவில் தோன்றி, இலிங்கத்தில் இருந்து வெளிப்பட்டு, அம்மையின் கரம் பற்றினார். அம்மை நாணம் கொண்டு, "சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள படி தாய் தந்தையர், உற்றார் உறவினர் சூழ என்னைத் திருமணம் முடிக்க வேண்டும்" என்று கூறினார். உன் விருப்பப்படியே நம் திருமணம் நடக்கும் என்று ஈசன் கூற, அம்மை முனிவரின் ஆச்சிரமம் அடைந்தார்.

சில காலம் கழித்து நந்தியை, பரத மாமுனிவரிடம் மணம் பேசி வர தூது அனுப்பி வைக்கிறார் சிவபெருமான். முனிவரும் சம்மதிக்க மணநாள் குறிக்கப்பட்டது. கைலாயத்திலிருந்து மணமகனாக, இடப வாகனத்தில் சிவபெருமான் வர, விநாயகர் முன்னே செல்ல, "உத்தாலம்" என்னும் மரமும் சிவபெருமானுக்கு நிழல் தந்து கொண்டே வந்தது. மணமகள் இருப்பிடமான குத்தாலம் வந்து பெற்றோர் சம்மதத்துடன் இறைவியாரை இறைவன் திருமணம் செய்து கொண்டார். சிவபெருமான் தான் இங்கு வந்து திருமணம் செய்ததற்கு அடையாளமாக தான் அணிந்து வந்த பாதுகைகளையும், கைலாயத்திலிருந்து தொடர்ந்து நிழல் தந்து வந்த உத்தால மரத்தையும்(ஒரு வகை ஆத்தி மரம்) விட்டு சென்றார். எனவே இத்தலம் உத்தாலவனம் என்று பெயர் பெற்று பின் மருவி "குத்தாலம்" என்றாயிற்று. தற்போது குத்தாலம் என்று அறியப்படும் இத்தலம் தேவாரப் பதிகம் பாடப் பெற்ற காலத்தில் "துருத்தி" என்றும் வழங்கப்பட்டது. துருத்தி என்றால் ஆற்றின் இடையில் உள்ள தீவு என்று பொருள்படும். இறைவன் தாமே சொல்லிய விதியின்படி, தான் திருமணம் செய்து கொள்வதாக இறைவிக்கு வாக்களித்து அதன் படியே நடந்து கொண்டதால், இறைவன் திருப்பெயர் சொன்ன வாரறிவார் என்றாயிற்று.

உருத்திரசன் என்ற சிவபத்தன் முத்தி பெற காசிக்கு சென்றான். இத்தலமும் காசிக்கு சமம் தான் என்பதை உணர்த்த சிவபெருமான், குண்டோதரனை அழைத்து "நீ பாம்பு வடிவம் எடுத்து உருத்திரசன் காசிக்கு செல்ல விடாமல் தடுத்து விடு" என்று கூறினார். அதன்படி பாம்பு இவனை தடுக்க, உருத்திரசன் கருட மந்திரத்தை உச்சரிக்க பாம்பு மயங்கிகீழே விழுந்தது. பாம்பை காப்பாற்ற சிவன் பாம்பாட்டி வடிவம் எடுத்தார். பாம்பாட்டியாக வந்திருப்பது சிவபெருமான் என்பதை அறிந்து அவன் வணங்க, "இத்தலத்தை வழிபட்டால் காசியில் வழிபட்ட புண்ணியம் கிடைக்கும்," என்று கூறினார்.

தன்னால் தீண்டப்படும் பொருள்கள் எல்லாம் அழிந்ததால், வருத்தமடைந்த அக்கினி தேவர் இங்கு வந்துதான் தன் குறையை போக்கி, அனைவருக்கும் பயனுள்ளவன் ஆனார். அக்கினி தன் பழி தீர சுவாமியை வழிபட்டது. விக்கிரம சோழன் மனைவி கோமளையின் குட்ட நோய் தீர்த்தது. காளி, கதிரவன், காமன் மற்றும் காசிபர் முதலிய ஏழு முனிவர்கள் வழிபட்டது இத்தலத்தில் ஆகும். சுந்தரருக்கு சரும நோய் தீர்த்தது. சிவபத்தனின் காச நோயை போக்கியது போன்ற பல பெருமைகளை உடையது.

சுந்தரரும் இத்தலத்து இறைவன் மேல் பதிகம் பாடி இருக்கிறார். சங்கிலி நாச்சியாருக்கு திருவொற்றியூரில் செய்து கொடுத்த சத்தியத்தை மீறி அவளைப் பிரிந்து சென்றதால் இரண்டு கண்களையும் இழந்து உடல் நலிந்து திருத்துருத்தி வந்திருக்கிறார். காஞ்சிபுரத்தில் ஒரு கண்ணில் பார்வையை மீண்டும் பெற்றாலும், நலிந்த உடலுடன் இத்தலத்திற்கு வந்து இங்குள்ள இறைவனை மனமுருகி வேண்டி, தன்னை மன்னித்தருளும்படி வேண்டினார். இறைவனும் ஆலயத்தின் வடபாகத்திலுள்ள தாமரைக் குளத்தில் நீராடினால் உன் உடற்பிணி தீர்ந்துவிடும் என்று அருளினார். சுந்தரரும் அவ்வாறே செய்ய, நீரிலிருந்து எழும்போது முன்னிலும் பளபளக்கும் திருமேனி எழிலுடன் திகழ்ந்தார்.

#### திருக்கோயில் அமைப்பு

கோயில் ஊருக்கு நடு நாயகமாக விளங்குகிறது. 5 நிலை இராசகோபுரம் மேற்கு நோக்கி உள்ளது. இரண்டு வீதிகள் கொண்டது. கோபுர வாயில் வழியாக உள்ளே நுழைந்தவுடன் கொடிமரம், பலிபீடம் உள்ளன. வலதுபுறம் தல மரமான உத்தால மரமும் அதை சுற்றி உள்ள பீடமும் உள்ளது. மூலவர் திருமுன் மேற்கு பார்த்து அமைந்திருக்கிறது. பக்கத்திலேயே தெற்குப் பார்த்த இறைவியின் திருமுன் உள்ளது. இவ்விரு கோயில்களும் தனித்தனியே வலம் வருமாறு தனித்தனி வீதிகளோடு அமைந்துள்ளன. இறைவியை மணந்து கொள்ள வந்த இறைவனுக்குத் துணையாக வந்த விநாயகர் "துணைவந்த விநாயகர்" என்ற பெயருடன் இறைவி திருமுன்னுக்கு செல்லும் வழியில் வெளி வீதியில் தென்மேற்கு மூலையில்



கோயில் கொண்டிருக்கிறார். உள்வீதியில் வலஞ்சுழி விநாயகரையும் தரிசிக்கலாம்.

கிழக்கு வீதியில் மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் அருள்மிகு சண்முகரை பார்த்துப் பரவசம் அடையலாம். அத்தனை கலையழகுடன் இவர் காட்சி அளிக்கிறார். வீதியின் கிழக்குப் புறத்தில் ஒன்பான்கோள்கள் (நவக்கிரகங்கள்), எழுவார் கண்ட நாதர் (சப்தரிஷீஸ்வரர்), சனைச்சரன், பைரவர் மற்றும் ஐந்து இலிங்கங்கள் ஆகிய திருமுன்கள் உள்ளன. சுவாமி கருவறை விமானத்திலுள்ள சுதைச் சிற்பங்கள் யாவும் பெரியவையாகவும், கலையழகோடும் காணப்படு கின்றன. அக்கினி தேவர் மற்றும் காசிபன், ஆங்கிரசன், கௌதமன், மார்க்கண்டேயர், வசிட்டர், புலத்தியர், அகத்தியர் ஆகிய எழுவரும் வழிபட்டு இத்தலத்தில் பேறு பெற்றுள்ளனர். கதிரவன், பரத முனிவர் ஆகியோரும் இத்தலத்து இறைவனை வழிபட்டு பெறும் பேறு பெற்றிருக்கின்றனர்.


நாமும் பாவங்கள் பிணிகள் நீங்க, சொன்னவாரறிவாரரை நினைந்து, திருமணத்தடைகள் நீங்கி, சீரும் சிறப்புமாய் தந்தை தாய் விருப்பத்தோடு திருமணம் நடந்தேறி வையகத்துள் வாழ்வாங்கு வாழ, எல்லாம் வல்ல, அருள்மிகு அரும்பன்ன வனமுலை அம்மை உடனுறை சொன்னவாறு அறிவார் திருவருள் கைகூடட்டும்.

திருச்சிற்றம்பலம்

**சிவத்திரு.குமரேசன் இராஜசிம்மன்**
உதவிப் பேராசிரியர்
SRM கலை மற்றும் அறிவியல் கல்லூரி
919003296221 - easanaithedi.in.

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ செந்தமிழாதன்,
தலைவர் – சைவ மாணவர் சபை,
(பதிவு–HA/4/JA/343)
0715588737, aathan@thennadu.org



# இது வரலாற்றுத் தடம்!

ஒரு பொறுப்பு வாய்ந்த நீண்ட பயணத்தின், முதல் தளத்தை **“தென்னாடு திங்கள் இதழ்”** அடைந்திருக்கிறது. ஓராண்டைக் கடந்து வந்திருக்கின்ற இந்த பயணம், தூய தமிழ் வழிபாட்டையும், தமிழ் மந்திரங்களின் உன்னத ஆற்றலையும், உலகம் முழுவதும் பரப்பும் வகையில் மின் இதழாகவும், இலவச அச்சு இதழாகவும். பன்னிரண்டு இதழை அடைந்து, தனக்கான அங்கீகாரத்தைப் பெற்றும் உள்ளது என்பதே தென்னாடு ஆசிரியர் திண்ணை பெருமைப்படும் விடயமாகும்! இறைமொழியாகிய தமிழ் மொழி, கருவறைகளுக்கு வெளியே காலம் காலமாகத் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டு வந்ததைக் கருதியும், எம் மொழியின் இறைதத்துவத்தை. இளைய பிள்ளைகளின் மனதில் விதைக்க வேண்டிய காலத்தின் பெரும் பணியைக்கருதியும் ‘தென்னாடு செந்தமிழாக்கம் சிவ மடத்தின்’ திங்கள் இதழாகிய இப் பத்திரிகைப் பணி ஆரம்பமானது! ஒவ்வொரு திங்களும் முழு நிறைமதி நாளில், **தென்னாடு செந்தமிழாகம் சிவமடத்தில்** வெளியீடு செய்யப்படும் இப் பத்திரிகை, நிகழ் உலகில் மேலான சைவத்தின் பெரும்புகழை எடுத்துச்சொல்லும் ஒரே ஒரு இலவச இதழ் என்பது இதன் தனித்துவம்!

இணைய வெளியிலும், ஈழத்தில் பொது வெளியிலும் பகிரங்கப்படுத்தப்படும் இப்பத்திரிகை உங்கள் கைகளில் கிடைக்கிறது என்றால் அது, சங்கம் கண்ட எம் கடவுளர்களின் அருள் என்றே எண்ணிக்கொள்க! பதிப்புத்துறையையும், வாசிப்பு ஆற்றலையும் நவீன விஞ்ஞான உலகம் பகுதியளவில் விழுங்கிவிட்டாலும் கூட, இளைய எழுத்தாளர்களுக்கும் **‘இல்லை’** என்று மறுக்காது இடம் கொடுத்து, இறையருளே வருவாய் என்று கருதி முன்னெடுக்கும் இப்பணி தடைகளைத் தாண்டி, எதிர்ப்புக்குரல்களுக்கு மேலாயும் எழுந்து நிற்கின்றது!

சீர் வளர்சீர் ஆறுமுகநாவலர் ஆற்றிய அச்சுப்பணி மகத்தானது! அவர் பின்னும், பல பெரியோர் அப்பணியை சீர்மிகவே செய்தனர்! ஆனாலும், அருந்தமிழைக் கலப்பின்றி, தனித்தமிழில் இயன்றவரை, இதழொன்றை வெளியிடும் எண்ணம் எவரும் கொண்டார்களா என்று, எம்மிடம் குறிப்புக்கள் ஏதும் இல்லை!

**“செய்யத்தக்க அல்ல செய்யக்கெடும் செய்யத்தக்க செய்யாமையானுங் கெடும்”** என்பது வள்ளுவர் வாக்கு! கால ஓட்டத்தில் நாமும் ஒட்டி ஓடுவோம். என்ற வழமைச் சிந்தனையோடு நாமும் பயணித்தால் எம் பழமைகளை இழக்க நேரிடும்! செய்ய வேண்டிய நேரத்தில் செய்ய வேண்டியதைச் செய்யாமல் இருப்பதும் கேடு தரும்! அத்தகு கேடு அன்னைத் தமிழிற்கு நேர்ந்திடக்கூடாது என்பதும், அதன் அருளாற்றலும் துய்மைத்தன்மையும் காலம் கடந்து பயணிக்க வேண்டும் என்று, தனித் தமிழ்க் கொள்கை நிலைநாட்டலும் செய்யத்தக்க செயல் என்றே கொள்க! சிவன் எங்கே உறைகிறான் என்ற கேள்விக்குத் திருஞானசம்பந்தர்,

**“தமிழின் நீர்வை பேசித் தாளம், வீணை பண்ணி நல்ல,**
**முழவம் மொந்தை மல்கு பாடல் செய்கை இடம் ஓவார்.”**

என்று பதில் தருகிறார்! ஞானப்பால் அருந்திய ஞானக்குழந்தையின் இறைவாக்கல்லவா இது! எனவே, தமிழ் தூய்மையாய் எங்கு துலங்குகிறதோ அங்கே இறைவன் இருப்பான் என்றால், உங்கள் கைகளில் உள்ள தென்னாடு திங்கள் இதழிலும் இறைவன் விரும்பி உறைகிறான்! படியுங்கள், பரப்புங்கள், வழிபாடும் செய்யுங்கள்! தென்னாட்டின் பதிப்புப் பணியில் எதிர்வரும் நாட்களில் ‘விதி மாற்றும் விரிசடையான்’ என்கிற நூலும் ஓவிய காட்சிகளுடன் கூடிய திருவாசக நூலும் அச்சேறி வர இறையருள் கூடியுள்ளது. என்கின்ற கூடுதல் செய்தியையும் உங்களுக்கு அறிவிப்பதில் மகிழ்கிறோம்! பதிப்புப் பணியில் தென்னாடு ஓராண்டை எட்டியிருக்கிறது என்றால், சங்கத்தை காத்த எமது முன்னவர்களின் அருவ ஆற்றல் எம்மை வழிநடத்துகின்றது என்பதே உண்மை! “தமிழில் அர்ச்சுனை செய்வது மன அழுத்தத்தை தருகின்றது” என்று தமிழ் தெரியாத தமிழ் மறை அறியாத சிலர் வெளிப்படையாகவே சொல்லக்கூடிய இக்காலத்தில், தெய்வத்தமிழில் வழிபாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கும், நம்மை உந்தும் ஆற்றலைக் கொடுப்பது நம் கடவுளரே என்பது உண்மை!

தமிழ் மறைகள் ஆகிய, திருமுறைகள் எம் எல்லார் வீடுகளிலும் ஓதும் நிலமை உருவாக வேண்டும். ஈழத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் உள்ள திருக்கோயில்கள் தோறும், ஓதுவார்கள் முறைப்படி இறைபணிக்கு சேர்த்துக்கொள்ள வேண்டும்! ஆலயங்களை பெருப்பிப்பதும் அழகு சேர்ப்பதும் அரும்பணிதான்! அதேபோல் திருக்கோயில்களில் திருமுறை ஓதுவார்களை நியமிப்பதும் பெரும்பணி என்பதையும், அச்சுப்பணி போலவே, ஆதி அந்தம் இல்லா இறைவனை ஓதும் பணியும் இன்றியமையாதது என்பதையும் ஈழத்து மற்றும் புலம்பெயர் கோயில்களின் அறங்காவலர்கள் அறிந்து செயற்படுத்த வேண்டிய காலக்கடமையை தென்னாடு சார்பில் முன்வைத்து அமைகிறோம்! ஓராண்டை அடைந்த எங்கள் திங்கள் இதழ் பல்லாண்டுகள் கடந்து பயணிக்க இறைவன் துணை நிற்க வேண்டும்! இன் தமிழ் உறவுகள் இணை நிற்க வேண்டும்!

**பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல்**
**சிறந்து நின் சேவடியே சேர்ந்தனன்-நிறந்திகழும்**
**மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே**
**எஞ்ஞான்று தீர்ப்பது இடர்!**

**திருச்சிற்றம்பலம்**

# சிங்கப்பூரில் சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்த காரைநகர் அம்பலவாணர்



**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வான்உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்**

சிங்கப்பூர் நாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்தவர் திருவாளர். அம்பலவாணர் அவர்கள். அவர்களது தமிழ் பணிகளில் பெரும்பங்கு பத்தி இலக்கியமான திருமுறைகளைப் பரப்புவதிலும், ஆய்வதிலும் இருந்ததெனலாம். அவரே சிங்கப்பூரில் திருமுறை மாநாட்டினைத் தொடங்கி பல ஆண்டுகள் நடத்தினார். ஈழ நாட்டிலிருந்து சிங்கப்பூரிற்கு பதியெழுந்த அம்பலவாணர், அக்கால கட்டத்தில் இலங்கையில் வாழ்ந்த திருமுறைக் கலாநிதி இராஜசேகரன் ஓதுவாரின் துணை கொண்டு, 1980ம் ஆண்டு திருமுறை முற்றோதலை நிகழ்த்தினார். அதே ஆண்டு சிங்கப்பூர் வீரகாளி அம்மன் கோயிலில் நால்வர் குருபூசையை நிகழ்த்தினார். இவையே சிங்கை திருமுறை மாநாட்டிற்கு முன்னோடி நிகழ்வாக அமைந்தன.

1981ம் ஆண்டு முதல் முறை திருமுறை மாநாட்டினை சிங்கப்பூரில் மூன்று நாட்கள் நிகழ்த்தினார். அதன் பின் பன்னிரண்டு ஆண்டுகள் அதன் வளர்ச்சிக்குப் பெரும்பணியாற்றினார். இந்தியா, இலங்கை, மலேசியா முதலிய நாடுகளில் உள்ள சைவத் தமிழ்த்தொண்டாற்றும் பெருமக்களை அழைத்துச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். இத்திருப்பணிகள் தோய்வின்றி நிகழ்த்தற் பொருட்டு அதற்கான வைப்பு நிதியையும் தொடங்கி வைத்தார்.

சிங்கப்பூரில் தமிழ்மக்களிடம் திருமுறைகளைப் பரப்புவதில், அம்பலவாணர் ஐயா பெரிதும் ஆர்வம் காட்டினார். சிங்கப்பூர்க் கோயில்களில் ஓதுவார்களைப் பணிக்கு அமர்த்தி, ஐம்புராணம் பாடும் வழக்கத்தினை ஏற்படுத்தினார். அத்துடன் திருமுறைகளை பண்ணோடு, இளையோர் பாட, பயில வேண்டும் எனும் எண்ணத்தில், ஓதுவார்களைக் கொண்டு திருமுறை வகுப்புக்களை நடாத்தினார். அத்துடன் திருமுறைகள் தொடர்பான பேச்சுப்போட்டி, திருமுறை ஓதற்ப் போட்டி, முதலியனவற்றை மாணவர்களிடத்தே நடாத்தி, திருமுறைகளைப் பரவலாக்கம் செய்யமுயன்றார். அவரது அரும்பணிகளிற்கு பக்கபலமாக விளங்கியவர் அவரது மனைவியான கண்மணி அம்மையாரும், அம்மையாரின் சகோதரிமாரான பேபியும், சிவமணியுமே ஆகும். ஒரு விபத்தால் அம்பலவாணர் அவர்களது கண்பார்வையானது பாதிப்படைந்தது. அத்தகைய நிலையிலையும் அவர் தொடர்ந்து தமிழ்ப்பணியையும் சைவப்பணியையும் மேற்கொண்டு வந்தார்.





சைவப்பணியும் திருமுறை மாநாடும் தடையின்றி சிறப்பாக நடைபெறுதற்கு, சைவத்திலும் தமிழிலும் மிகுந்த ஈடுபாடுடைய அடியார்களையும் பெரியார் களையும் கொண்டமைத்த குழுவே காரணமாகும். ஈழத்துக் காரைநகரிலிருந்து சிங்கப்பூர் சென்ற அம்பலவாணர், தமிழிற்கும் ,தமிழ் சமுதாயத்திற்கும் சைவத்திற்கும் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை அவற்றின் சிறு குறிப்பே இதுவாகும். இந்த திருமுறை மாநாடு இன்றும் சிறப்பாக 41 வருடகாலமாக நடந்து வருகிறது.

இன்றய காலகட்டத்தில் ஈழத்திலும் பார்க்க அதிக தமிழர் வாழும் புலம்பெயர் நாடுகளில் சைவத்தினையும் தமிழினையும் நிலைநிறுத்த, திருமுறைகள் மற்றும் சைவ சித்தாந்தம் போன்றவற்றை அடுத்த தலைமுறைக்கு ஊடுகத்த புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் வகிபாகம் என்ன என்ற வினா எழுந்த நிற்கிறது.

**திருமுறையே சைவநெறிக் கருவூலம்**
**தென்தமிழின் தேன்பாகாகும்**
**திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான்**
**செவிமடுத்த செந்தமிழ் வேதம்**
**திருமுறையே நடராசன் கரம் வருந்த**
**எழுதியருள் தெய்வ நூலாம்**
**திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய்**
**மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்**

**திருச்சிற்றம்பலம்**



# கோவிட் தீநுண்மிப் பரவல் காலத்தில் சிவப்பேறு அடைந்தவர்களுக்குரிய வழிபாடு

உங்கள் பெற்றோர், உறவினர்களின் உயிர் உடலைவிட்டுத் தான் பிரிந்துள்ளது. அந்த உயிருக்கு என்றும் அழிவில்லை. அவர்களின் உயிரின் முத்திப்பேற்றுக்கும் மற்றும் அவ்வுலகில் அதாவது சிவபுரத்தில் அருள்வேண்டியும் பிள்ளைகள் மற்றும் உறவினர்களாகிய நீங்கள் செய்ய வீட்டில் இருந்தே செய்யவேண்டிய படிமுறைகளை நாங்கள் இங்கே தருகிறோம். அத்துடன் அவர்களின் உயிரின் நிலைபேற்றிக்கு தென்னாடு சிவமடத்தினராகிய நாங்களும் எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி விண்ணப்பம் வைக்கிறோம்.

**சிவபேறு அடைந்தவரின் படத்தை வைத்து அவர்களுக்காக ஒரு செம்பில் தண்ணீரும் தட்டில் கற்பூரமும் ஏற்றி கீழ்வரும் பாடலை ஓதுக.**

**அங்கத்தை மண்ணுக் காக்கி யார்வத்தை யுனக்கே தந்து**
**பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன் பரமா நின்னைச்**
**சங்கொத்த மேனிச் செல்வா சாதனா ணாயே னுன்னை**
**எங்குற்றா யென்ற போதா விங்குற்றே னென்கண் டாயே**

**அதன் பின்னர் வீட்டில் உள்ள அனைவரும் ஒன்றுகூடி திருவாசகத்தில் சிவபுராணம் ஓதி சிவப்பேறு அடைந்த உயிரினை நினைத்து மலரிட்டு வழிபாடு ஆற்றுக.**

**நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க**
**இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க**
**கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க**
**ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க**
**ஏகன், அநேகன், இறைவன் அடிவாழ்க** (#TV01)

**பின்னர் திருவிளக்கு ஏற்றி சிவப்பேறு அடைந்த உயிரின் பொருட்டு திருவாசகத்தில் உத்தரகோச மங்கையில் அருளிய நீத்தல் விண்ணப்பப் பதிகத்தினை ஓதுக.**

**கடையவனேனைக் கருணையி**
**னால்கலந்து ஆண்டுகொண்ட**
**விடையவனே,விட்டிடுதி கண்டாய்**
**விறல் வேங்கையின்தோல்**
**உடையவனே,மன்னும் உத்தர**
**கோசமங்கைக்கு அரசே!**
**சடையவனே, தளர்ந்தேன் எம்பிரான்**
**என்னைத் தாங்கிக்கொள்ளே** (#TV06)

**அத்துடன் சிவப்பேறு அடைந்த உயிரின் பொருட்டு திருவாசகத்தில் தில்லையில் (சிதம்பரத்தில்) அருளிய யாத்திரைப் பத்து பதிகத்தினையும் முழுமையாக ஓதுக.**

**பூஆர் சென்னி மன்னன்,எம்**
**புயங்கப் பெருமான், சிறியோமை**
**ஓவாது உள்ளம் கலந்து உணர்வாய்**
**உருக்கும், வெள்ளக் கருணையினால்,**
**'ஆ! ஆ!' என்னப் பட்டு, அன்பாய்**
**ஆட்பட்டீர்! வந்து ஒருப்படுமின்**
**போவோம் காலம் வந்தது காண்**
**பொய்விட்டு, உடையான் கழல் புகவே.** (#TV45)

(08ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்து தம்புரா இசை வல்லான் நாச்சிமார் கோயிலடி சண்முகலிங்க ஓதுவார்

யாழ் வண்பண்ணை நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் திருவாளர் திருவாட்டி நாகலிங்கம் கண்ணம்மா ஆகிய தம்பதியினருக்கு 07.01.1926 இல் மகனாகப் பிறந்தார். இவர் பிறந்த ஊரான நாச்சிமார் கோயிலடி அன்றும் இன்றும் இயல், இசை, நாடகத் துறைகளில் மிகவும் மேன்மை பெற்று வருகின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

அப்பேற்பட்ட மண்ணிலே பிறந்த சண்முகலிங்கத்திற்கும் இயல் இசை நாடகத்தின் மீது வற்றாத ஆர்வம் ஏற்பட்டதில் ஐயமில்லை. தனது இளமைக் கல்வியினை கில்னர் கல்லூரியில் பயின்றார். பள்ளிப் பருவத்தில் கல்வி கற்கும்போதே இசை மேல் கொண்ட பேரார்வத்தினால் இசையையும் கற்றுக் கொண்டார். இவரது இசை ஆர்வம் கல்லூரியில் பல நிகழ்வுகளில் ஆரம்பித்து மேடைக் கச்சேரி வரை வளர்ச்சி பெற்றது.

இளம் பருவத்திலேயே பல மேடைக் கச்சேரிகளை இவர் திறம்படவே செய்து தனது இசையறிவினை வளர்த்தார். சிறுவயதிலேயே பல பெரிய மேதைகளின் இசையினால் கவரப்பட்டார். குறிப்பாக இந்திய நாட்டின் இசை வளர்ச்சியிலும் இசை கலைஞர்கள் மேலும் தாளாத அபிமானம் கொண்டார். இவரது இந்த ஆர்வம் பிற்காலத்தில் அவரை பல இந்திய நாட்டு கலைஞர்களுடன் ஒன்று சேர



வைத்தது என்றால் அவரது இசை பத்தியும் ஆர்வமும் சொல்லிமாளாது.

ஆரம்ப காலத்தில் தனது இசையை முறைப்படி திரு. நடராசா ஐயாக்கண்ணு தேசிகர் என்பரிடம் கற்றுத் தேர்ந்தார். அத்துடன் யாழ்ப்பாண இசைப்புலவர் திரு. என். சண்முகரத்தினம் அவர்களிடம் கர்நாடக இசையையும் பண்ணிசையையும் கற்றுத் தேர்ந்தார். இலங்கை இந்திய வானொலி மூலம் பல கச்சேரிகளை தினமும் நேரம் தவறாது கேட்டு பல இசை நுட்பங்களையும் தெரிவதில் ஆர்வம் கொண்டர்.



**கர்நாடக இசையின் அடித்தளத்துடன் தமிழ் இசையின் மீதும் இவர் நாட்டம் சென்றது. குறிப்பாக தேவாரம் திருவாசகம் போன்ற வாழ்க்கைக்கு தேவையான பல குறிப்புகள் அடங்கிய தமிழ் வேதங்களின் மேல் பேரார்வம் கொண்டார்.** சைவத்தின் மேன்மைகளை இவற்றின் மூலம் அறிந்து கொண்டதன் பலன், இவரது தேடல் தேவாரப்பதிகங்கள் சைவத்தின் வளர்ச்சி பற்றிய சிந்தனைகளிலும் அவற்றை திறம்பட செயலாற்றுவதிலும் தொடர்ந்தது. தேவாரப் பதிகங்களை சரியாக கற்றுக்கொள்ள ஆர்வம் கொண்ட சண்முகலிங்கம் நல்லை ஆதினத்தில் முறைப்படி தேவாரப் பண் பதிகங்களை கற்றுத் தேர்ந்தார்.

இந்தியாவில் இருந்து சிறப்பு பணியாற்ற வருகை தந்திருந்த பண்ணிசை வேந்தர் பி.எஸ்.இராசசேகரம் மற்றும் தர்மபுரம் சுவாமிநாதன் ஆகியோரிடம் தேவாரப்பதி கங்களை கற்றுத் தேர்ந்தார். அதனைத் தொடர்ந்து இவரது பணி கோயில்களில் ஆரம்பித்தது, இவரது இசைத் தொண்டினை மேலும் பரிணமிக்கச் செய்தது.

அதே சமயம் இவர் நாச்சிமார் கோயிலடியில் இசை வளர்ச்சிக்கான பல பணிகளில் பங்காற்றத்தொடங்கினார். 'கந்தர்வ கான சபா' என்ற இயல் இசை நாடகம் சார்ந்த சபாவில் அங்கம் வகித்து பல இசை வடிவங்களில் பாடி உள்ளார். அக்காலத்திலே நாடகத் துறை சார்ந்தும் இவர் பல பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். குறிப்பாக "கலைவாணர் நாடக சபா"விலே பல உள்நாட்டு நாடகக் கலைஞர்களுடன் தமது பங்களிப்பையும் செவ்வனே செய்து மகிழ்ந்தார் .

இக்காலத்தில் இவரது நோக்கு தேவாரப் பதிகங்களை பலரும் கேட்கும் படியும் பாடும்படியும் அதன் பலனை அடையும் வழிகளையும் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்வதிலும் அதனை வழிகாட்டுவதிலும் நாட்டம் கொண்டது. அதன் பலனாக கோயில்களில் "கூட்டு பிரார்த்தனை" அமைப்பை உருவாக்கி அதன்மூலம் சிறியவர் முதல் முதியவர் வரை தேவாரப்பதிகங்களை அதன் பண், இராக, தாளத்திற்கேற்ப கற்றுக்கொடுக்கலானார்.

(06ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்து தம்புரா இசை வல்லான்...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பலனாக கோயில்களில் வாரந்தோறும் கூட்டுப் பிரார்த்தனை ஆரம்பிக்கப்பட்டு வெள்ளி வார உற்சவம், திருவிழா காலங்களில் தேவாரப் பாடல்களை திறம்பட அனைவரும் பாடி சுவாமியுடன் வலம் வரும் சூழ்நிலை ஏற்படுத்தியது. பத்தர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. கோளறுபதிகம், திருநீற்றுப்பதிகம், சிவபுராணம் போன்றவற்றை இடைவிடாது பாடும் பழக்கத்தினை கூட்டுப்பிரார்த்தனை மூலம் எல்லோரிடமும் அறிமுகப் படுத்தினார். சண்முகலிங்கம் தேவாரப்பதிகங்களை பாடும் நற்பணியை வாழ்த்திய பலர் அவரை **தலைமை ஓதுவா மூர்த்தி** என்று அவரது பணிக்கு மகுடம் வைத்தனர்.

வண்ணை அருள்மிகு குளங்கரை மருதடி காமாட்சி அம்மன் ஆலய தலைமை ஓதுவாராக தனது இறுதிக்காலம் வரை பணியாற்றினார் என்றால் மிகையாகாது. இவர் தேவாரப் பதிகங்களை ஐம்புராணம் ஓதும் போது இவரது குரல் ஒலி ஆலயம் எங்கும் ஒலிக்கும், பத்தர்கள் அனைவரையும் மெய்மறக்கச் செய்யும் குரலையும் இசை நுட்பமாக மெருகூட்டி பாடும் திறனும் அவரை பல ஆலயங்களில் சிறப்பு ஓதுவராக அழைப்பு விடுத்தார்கள்.

நாச்சிமார் கோயில் தவிர அரசடி விநாயகர் ஆலயம், முருகமூர்த்தி ஆலயம், சொர்ணவடலி பிள்ளையார் ஆலயம், கேசாவில் பிள்ளையார் கோயில், கலட்டி அம்மன் கோயில் என பல யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்கள் தவிர பல ஏனைய ஊர்களில் உள்ள ஆலயங்களிலும் இவரது குரல் தேவாரப்பதிகங்களாக ஒலித்தது.

வண்ணை காமாட்சி அம்மன் ஆலயத்தின் திருப்பள்ளி எழுச்சி திருப்பாடலை செவ்வனே சீர் அமைத்து அதனை தினமும் அதிகாலை 4 மணிக்கு ஆலயம் சென்று பாடி வந்தார்.




அம்பாளிற்கே, பள்ளி எழுச்சியை தனது வாழ்நாள் பூராவும் பாடும் பேறு பெற்ற ஓர் அற்புத மனிதராக அவர் திகழ்ந்தார். இப்பேறு கிடைக்க அவரும் அவர்தம் பெற்றோரும் என்ன பாக்கியம் செய்தனரோ. இவரது பண்ணிசை கச்சேரிகளுக்கு பக்கபலமாக இருந்த மிக முக்கியமான இசை வல்லுநர்களின் பங்களிப்பை கூறாமல் இருந்து விட முடியாது. சிறந்த பக்கவாத்தியமே ஓர் இசையினை பூரணமடையச் செய்கின்றது என்பதில் ஐயமில்லை.

இவர் செய்த புண்ணியம் மிகவும் பிரசித்தி பெற்ற கலைஞர்கள் நாச்சிமார் கோயிலடியிலேயே வாழ்ந்துள்ளார்கள். அவர்களே இவருக்கு பக்கபலமாக இருந்துள்ளார்கள். குறிப்பாக ஆர்மோனியம் கலைஞர் சக்கரபாணியர் என்று அழைக்கப் படுகின்ற முத்துக்குமாரு (இலங்கையின் மூத்த இசையமைப் பாளர் கலா பூசணம் கோபாலகிருஷ்ணன் - கண்ணன் மாஸ்டர் அவர்களின் தந்தை), மிருதங்க மேதை திரு. அம்பலவாணர் (தற்போதுள்ள திரு. ஜெயராமன் வயலின் இசைக்கலைஞர், திரு. ரகுநாதன் மிருதங்கக் கலைஞர் அவர்களின் தந்தை), திரு. சர்வேஸ்வர சர்மா வயலின் இசைக்கலைஞர் இப்படி இவருக்கு உறுதுணையாக இருந்த பல கலைஞர்களை சொல்லிக் கொண்டே போகலாம்.

1956-ம் ஆண்டு கொக்குவிலைச் சேர்ந்த செல்வநாயகப் பத்தர் அவர்களின் புதல்வி விமலேஸ்வரியை கரம் பற்றி தனது இல்வாழ்வை ஆரம்பித்தார். இவரது கலை நுட்பம் சார்ந்த அறிவு இசை நாடகம் மட்டும் இன்றி பொற்தொழில் மேலும் நாட்டம் இருந்தது. அதை இவர் தமது குலத்தொழி லாகவும் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஓவியங்கள் வரைவதில் சண்முகலிங்கம் மிகவும் கைதேர்ந்தவராகவும் விளங்கினார்.

பல இசை கலைஞர்களின் உருவங்களை வரைவதில் நாட்டம் கொண்டார் அதே போல் ஆபரண வடிவமைப்புகள் இவருக்கு நிகர் இவரே பலரும் இவரது இவ்வாற்றலை மெச்சி அதனை பயன்படுத்தி பேறுபெற்றனர். மோதிரம், வளையல், பதக்கம், தோடு, தாலி இப்படி பல பல ஆபரணங்களிற்கு புதிய பல வடிவங்களை இவர் உருவாக்கினார் கோயில் விக்கிரகங்களிற்கும் ஆபரணங்கள் செய்யும் பலனையும் அவர் பெற்றிருந்தார் இவரை சண்முகலிங்கப் பத்தர் என அன்பாக இத்துறை சார்ந்தோர் அழைக்கலாகினர்.

இல்லற வாழ்விலே இவரது இனிய பயணத்தின் நற்பேறாக



ஐந்து ஆண் பிள்ளைகளையும் ஒரு பெண் பிள்ளைகளையும் இறை ஆசியுடன் பெற்றார். “புலிக்கு பிறந்தது பூனையாகுமா” என்ற வாக்கியத்திற்கேற்ப அவரது பிள்ளைகள் இசைசார் துறையில் அன்றும் இன்றும் இறை குரு ஆசிகளுடன் சிறப்பாக உள்ளார்கள்.

பிள்ளைகளில் கலாபூசணம் ஞானகுருபரன் ஓவியக் கலைஞராகவும், குமரகுருபரன் நாடக தொழில் நுட்ப கலைஞகராகவும், தேவகுருபரன் மிருதங்கம் தபேலா கலைஞகராகவும், உமாகுருபரன் கர்நாடக பாட்டு கலைஞகராகவும், மகள் சாருமதி வீணைக் கலைஞகராகவும், நாகராஜன் மிருதங்கக் கலைஞகராக உள்ளனர். தாயார் விமலேஸ்வரியின் இசை ஆர்வத்தினால் தமது குடும்ப சூழ்நிலைகள் பல இக்கட்டான நிலைகளை சந்தித்தவேலையிலும் மனம் தளராது தமது அயராத கடும் முயர்ச்சியினாலும் ஒத்துழைப்பினாலும் சண்முகலிங்கத்தினையும் குழந்தைகளையும் மேல் நிலைக்கு கொண்டு வந்த பெருமை அந்த தாய்க்கு உரித்தான பெருமை என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது இந்த ஓதுவார் பணி தொடர்ந்து கொண்டு இருந்த காலத்தில், இந்தியாவில் இருந்து வருகை தரும் முக்கியமான கலைஞர்களுக்கு எல்லாம் தம்புரா என்ற சுருதி வாத்தியங்களை மீட்டுவதில் மிகவும் முக்கிய பங்கு வகித்தார். சங்கீத பூசணம் கே. ஆர். நடராஜா அவர்களிடம் தம்புராவை இசைக்க கற்றுக் கொண்டார். இவரது தம்புரா மீட்டும் பாங்கு பல இந்திய கலைஞர்களை கவர்நதது என்றால் உள்நாட்டு இசை கலைஞர்களை மட்டும் கவராதா என்ன? ஆம் பல பல இசை கலைஞர்களுக்கு இவர் தம்புரா மீட்டி தலைமை வித்தகராக காட்சியளித்தார்.

இவரது பணிவு, தன்னடக்கம், தனக்கு இத்தனை கலைகள் தெரிந்தும் கர்வமில்லாத சாதாரண நிலை, “எல்லாம் எப்பொழுதோ முடிந்த காரியம்” எனும் யோகர் சுவாமிகள் வாக்கும், “ஓம் சக்தி” என்று தனது தாயை என்னேரமும் அழைப்பதையும் இடைவிடாது கூறிக்கொண்டே, அவர் காரியங்களில் ஈடுபடுவது பலருக்கும் பிடித்தமானதாக இருந்தது.

உள்நாட்டுக் கலைஞர்கள் என்ற வரிசையில் திரு.பொன் சுந்தரலிங்கம், திரு.பாலசிங்கம், திரு.வால்நடராஜா, திரு. பத்மலிங்கம், திரு.திலகநாயகம்போல, திரு.சர்வேஸ்வர சர்மா, திரு.ராதாகிருஷ்ணன்(வயலின்), திரு.ந.மு.பத்மநாபன் (நாதஸ்வரம்), திரு.ந.சண்முகசுந்தரம், பரம தில்லை ராசா, திரு.யு.மு.கருணாகரன் ஆகியோருக்கு தம்புரா கலைஞராக பணியாற்றினார்.

இந்தியாவில் இருந்து வருகை தந்த சீர்காழி கோவிந்தராஜன், கே.பி. சுந்தராம்பாள், மகாராஜபுரம் சந்தானம், பால முரளி கிருஷ்ணா, குன்னக்குடி வைத்தியநாதன், ஸ்ரீரங்கம் வி. எஸ். கிருஷ்ணமூர்த்திராவ, சந்தியா வந்தணம் ஸ்ரீநீவாசராவ், எம். எம்.மாரியப்பா, திருச்சி லோகநாதன் ,எம்.கே.கோவிந்தராஜ பாகவதா, கும்பகோணம் டீ.வி.மைதிலி, டீ.என். இராஜரத்தினம் பிள்ளை, புதுக்கோட்டை உலகநாதன், பிரம்மஸ்ரீ



கே.ராமநாதன் போன்ற இந்திய கலைஞர்களுக்கும் தம்புரா மீட்டி அவர்களது நன்மதிப்பை நாட்டுக்கும் இசைத் துறைக்கும் பெற்றுக் கொடுத்தார். இவரது திறமைக்கு சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் ‘தம்புரா இசை வல்லான்’ எனும் பட்டத்தினைக் கொடுத்து கௌரவித்தமை பெருமைக்குரியது.

இவரது ஓதுவார் பணி, தம்புரா இசைப்பணி மனதிற்கு அமைதியை கொடுத்தாலும் உடலுக்கு ஆரோக்கியம் தரும் யோகாசன கலையில் மிகவும் பாண்டித்தியம் பெற்று விளங்கினார். தினமும் யோகாசனம் செய்வதை தமது தலையாய செயலாக கொண்டிருந்தார். மிகவும் கடினமாக பல ஆசனங்களை தமது பயிற்சியினால் இலகுவாகச் செய்தார். இந்த யோகாசனம் இவரை பல இக்கட்டான காலகட்டங்களில் உயிர் காப்பாக அமைந்தது உண்மையே. யோகாசனம் செய்பவர்கள் இசையுடன் தொடர்புடையவர்கள் மிகுந்த மன வலிமையும் பொறுமையும் வெற்றிகளையும் கொண்டு வாழ்வார்கள் என்பதற்கு ஓதுவார் மூர்த்தி தம்புரா கலைஞர் பத்தர் சண்முகலிங்கம் அவர்களே ஓர் நல் உதாரணம்.

நாட்டுக் குழப்பங்கள் காரணத்தினால் தமது கனவுகளை நினைவாக்க இந்தியா வந்தார் சண்முகலிங்கம். அங்கு தனது இளைய புதல்வனுடன் இனிதே இறை வழிபாட்டுடன் காலம் கழித்தார். பல தேவாரப் பாடல்கள் பெற்ற திருத்தல யாத்திரைகளை மேற்கொண்டு, அங்கு இறைவனை நேரிலே பார்த்தது போல் மனம் நெகிழ்ந்து தேவாரப் பதிகங்களைப் பாடினார். ஆனந்தத்தில் திகழ்ந்தார்.

சீர்காழி, சிதம்பரம், திருவாரூர், திருவானைக்காவில், திருவண்ணாமலை, தஞ்சை பெரிய கோயில், மதுரை மீனாட்சி கோயில், காஞ்சி காமாட்சி உட்பட பல தமிழ்நாட்டு திருத்தலங்களை நேரில் சென்று தரிசித்தார். அவரது மனம் பேரானந்தம் அடைந்தது. திருவான்மியூர் மருந்தீசுவரன் முன் தினமும் பாடி தொழுதார்.

1999-ம் வருடம் இறைவன் சண்முகலிங்கத்தினை தன் அடிகளின் கீழ் அமர திண்ணம் கொண்டானோ என்னவோ திடீரென ஏற்பட்டநோயினால் அவர் உயிர் இறையடி கலந்தது. இறக்கும் போது அவரது இளைய மகனின் மடிகளில் தனக்கு விபூதி பூச வேண்டும் என்று சைகை செய்ய அதை உணர்ந்த அவரும், நெற்றியில் விபூதியை அணிந்து வாயிலும் போட்டார். அவ்வளவு தான் அவர் கண்களை மூடி 13-04-1999 அன்று சிவபுரம் ஏகினார். இறைவனைக் கண்டார். இவ்வுலகை விட்டு இறையுலகை அடைந்தார்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு என்று அவர் எத்தனை முறை பாடித் தொழுதேத்தி இருப்பார், அந்த திருவாலவாயானை. இறைவனே அவரது அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றி ஆசி வழங்கிவிட்டார். இன்று அவரது இப்பணியை தொடர்ச்சியாக அவரது பிள்ளைகள், பேரபிள்ளைகள் என அனைவரும் இசையுடன் இறை அருளுடனும் இனிதே இவர் வழியில் வாழ்கின்றனர் என்பதே சிறப்பான விடயமாகும். நிச்சயம் பிள்ளைகளின் இப்பணி அவரின் உயிரை எங்கிருந்தாலும் மகிழ்விக்கும் என்பதில் ஐயமில்லை. இவர்கள் அனைவருக்கும் அவர் இன்றும், என்றும் குருவாக இருந்து ஆசி வளங்குகிறார் என்பதுதான் உண்மை.

ஓதுவார் மூர்த்தியாக வாழ்ந்து இசையில் காதல் கொண்டு இந்திய மண்ணிலே தமது இன்னுயிரை இறையுடன் இரண்டாகக் கலந்த திருவாளர். சண்முகலிங்கம் ஓதுவார் அவர்கள் பணிகள் என்றும் போற்றுதலுக்குரியன. அவர் செய்த சிவப்பணிகள் அவர்தம் வழிவந்தவர்களூடு தொடர எல்லாம்வல்ல ஆடல்வல்லான் அருளாசிகள் கிடைக்கட்டும்.

**திருச்சிற்றம்பலம்**

# ஈழத்து சித்தர்கள்: சித்தர் பெரியானைக்குட்டி சுவாமிகள்

கொழும்பு முகத்துவாரத்தில் இருக்கும் பெரியானைக் குட்டிச் சுவாமிகளுடைய சமாதிக்குச் சென்ற போது வாய்விட்டுச் சொல்ல முடியாத ஆனந்தமான அமைதியை அனுபவிக்க முடிந்தது. மகான்கள் பூத உடலோடு வாழுங் காலங்களில் அவர்களது திருச்சமூகம் எவ்வாறு ஆத்மீக அலையால் சூழப்பட்டிருக்குமோ அவ்விதமே அவர்கள் சமாதிகளிலும் ஆத்மீக அலை ஒன்று சூழ்ந்திருப்பதைச் சாதகர்கள் இலகுவாக அறிந்து கொள்ளலாம்.

### கண்டியில் பெரியானைக் குட்டி சுவாமிகள்


பெரியானைக்குட்டி சுவாமிகள் முற்பகுதியில் கண்டியில் வாழ்ந்து வந்ததாக அறியக்கிடக்கின்றது. கண்டியில் சுவாமிகளைத் தரிசித்து உரையாடிய பெருமக்கள் சிலர் தாம் சுவாமிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகக் கூறியுள்ளார்கள். பெரியானைக்குட்டி சுவாமிகள் நவநாத சித்தருடன், மீண்டும் இலங்கைக்கு வருமுன்பே இளம் வயதில் கண்டியில் வாழ்ந்ததாகத் தகவல்கள் கிடைக்கின்றன. இளம் வயதில் சுவாமிகள் கண்டியில் வாழ்ந்து, இந்தியா சென்று பின்பு நவநாத சித்தருடன் வந்திருக்கிறார்கள்.

இவர் சிறு பையனாகக் கண்டிக் கடைவீதியிலே சுற்றித் திரிந்தார். கண்டித் தெப்பக்குளத்திற்குப் பக்கத்திலே ஒரு சலவைத் தொழிலாளி வசித்து வந்தார். அவர் ஒருநாள் இந்தப் பையனைத் தமது வீட்டிற்கு வருமாறு அழைத்தார். பையனுடைய நல்ல குணங்களை அறிந்த அத்தொழிலாளி தனது சொந்தப்பிள்ளையைப் போலவே அன்பு செய்து வளர்த்து வந்தார். பையனும் வளர்ப்புத் தந்தைக்கு வேண்டிய உதவிகளைத் தாமாகவே உணர்ந்து செய்து வந்தார். மூட்டைகளைச் சுமந்து கொண்டு குளத்திற்குச் செல்லுதல், துணிகளைப் பால்போல் நிறமாகும் வண்ணம் துவைத்தல், தோய்த்த அழுக்குத்துணி துணிகளைக் காயவிடுதல், காய்ந்த துணிகளை மாராப்பாய்க் கட்டி வீட்டுக்குக் கொண்டு செல்லுதல் போன்ற தொழில்கள் அத்தனையையும் மகிழ்வுடன் செய்தார். ஒய்வு நேரங்களில் ஓடி ஆடி விளையாடவும் தவறவில்லை. சிறு வயதிலே உடைகளின் அழுக்கைப் போக்குவதில் வல்லவனான சிறுவன், பெரிய ஆனைக்குட்டி சுவாமிகள் ஆனதும் எத்தனையோ உயிர்களின் மன அழுக்கைப் போக்கி உள்ளார். மும்மல அழுக்கை நீக்கி எத்தனையோ சீடர்களை ஆட்கொண்டார்கள்.

ஆனைக்குட்டி என்பது வளர்ப்புத் தந்தையார் வைத்த பெயராகும். பாரங்கள் நிறைந்த அழுக்குத் துணி மூட்டைகளை இலகுவில் தூக்கிச் சுமந்து செல்வதால், செல்லமாக இப் பெயரைச் சூட்டினாரோ தெரியவில்லை. ஒருமுறை “அம்மா, அம்மா, பாம்பு, பாம்பு” என்று சத்தமிட்டான் சிறுவன். இச்சத்தத்தைக் கேட்ட வளர்ப்புத் தாயார் ஓடோடியும் வந்தார். “எங்கேடா மகனே பாம்பு?” என்றார்கள். ஆனால் ஆனைக்குட்டியோ கெக்காளம் கொட்டிச் சிரிக்கலானான். இந்தப் பரிகசிப்பு தாய்க்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கியது. இரண்டாம் முறையும் அப்படியே பலத்த சத்தமிட்டு அழைத்தான். வீட்டிலிருந்த சில ஆண்கள் மாத்திரம் ஓடிச் சென்று பாம்பு எங்கே என்று விசாரித்தனர். அவர்களையும் ஆனைக்குட்டி பரிகசித்து அனுப்பினான்.

மூன்றாந் தடவையும் உரக்கக்கூவி அழைத்தான். ஒருவரும் ஏன் என்று கேட்கவில்லை. சில மணித்தியாலங்கள் சென்றன. கொல்லைப்பக்கம் சென்ற ஆனைக்குட்டியைக் காணவில்லையே என்று தேடிச் சென்றனர். அங்கே ஆனையைக் காணாமல் திகைத்தனர். ஆனால் அவர் மலங்கழித்த இடத்தில் தங்கக் குவியலாய் இருப்பதைக் கண்டனர். தங்கத்தை எடுத்து பாதுகாப்பாக வைத்து விட்டு, குடும்பம் முழுவதுமே ஆனைக்குட்டியைத் தேடுதலில் ஈடுபட்டது. கண்டி வீதியெல்லாம் தேடினர். கண்டுபிடிக்க முடியவில்லை. ஈற்றில், கண்டி அருள்மிகு கதிரேசன் கோயில் படியில் படுத்திருக்கக் கண்டனர். அவரை வீட்டுக்குத் திரும்பி வருமாறு பல படியாகக் கெஞ்சி அழைத்தனர். அவரோ, நீங்கள் யாரோ, நான் யாரோ, என்ற எண்ணம் உடையவர் போல மௌனமாய் இருந்துவிட்டார். இந்தப் புதினத்தைக் கண்ணுற்ற கோயில் குருக்கள், சலவைத் தொழிலாளரைப் பார்த்து, இந்தப் பையனுக்கு மூளைக்கோளாறு ஏற்பட்டுள்ளது போல் தெரிகிறது. ஆகவே அவரைத் தொந்தரவு செய்யாமல் வீட்டுக்குத் திரும்பிப் போகும்படி கட்டளையிட்டார். வந்தவர்களும் அவரைவிட்டு நீங்கி, வீடு சென்றனர். கதிரேசப் பெருமானே குருக்கள் நாவினின்று இவ்வார்த்தைகளைக் கூறியுள்ளார். இப்படிக் கூறியிருக்கா விட்டால் அவர்கள் அவ்விடத்தை விட்டுச் சென்றிருக்கவே மாட்டார்கள்.

ஆண்டவன் ஆனைக்குட்டியைப் பலப்பல சாதனைகளில் ஈடுபடுத்தி உள்ளுணர்வை உயரச் செய்து கொண்டிருந்தான். ஆனைக்குட்டி தினமும் கடைவீதிக்குச் சென்று, எச்சில் இலைகளைப் பொறுக்கி, அவற்றிலுள்ள மீதி உணவுகளைச் சாப்பிட்டுவிட்டு கோயில் படிக்கே திரும்பி வந்துவிடுவார். உலக மக்கள் தம்மை நெருங்காதவாறு மகான்கள் தம்மை மறைத்தே வாழ்ந்து வந்தனர். எச்சில் இலையோடு தினமும் உட்கார்ந்து இருக்கும் ஒருவரை யார்தான் அண்டுவார்கள். அப்படிப்பட்ட ஒருவரோடு பேச்சுக் கொடுத்தாலே தமக்குக் கௌரவம் இல்லை என்று நினைக்கலாமல்லவா?




இச்சந்தர்ப்பத்திலே சீவன் முத்தர்களைப் பற்றிக் கைவல்யத்திலே வரும் செய்யுள் ஒன்று நினைவுகூரத்தக்கதாகும்.

**காமமாதிகள் வந்தாலும் கணத்திற்போம் மனதிற்பற்றார்**
**தாமரைஇலைத் தண்ணீர்போல் சகத்தொடுங் கூடிவாழ்வார்**
**பாமரர்எனக் காண்பிப்பார் பண்டிதத் திறமைகாட்டார்**
**ஊமருமாவார் உள்ளத்துவகையாம் சீவன் முத்தர்.**

நான் என்ற அகந்தை அற்றுப் போகவும், ஆண்டவன் படைப்பில் எவ்வித உயர்வு தாழ்வும் கருதக்கூடாது என்பதைச் சாதனைப்படுத்தவுமே மகான்கள் இத்தகைய செயல்களில் ஈடுபட்டு நடிப்பார்கள். அந்தணராகப் பிறந்த இராமகிருஷ்ண பரமகம்சர் அதிகாலையில் எழுந்து சென்று புலையர் சேரியைக் கூட்டி மெழுகி வைத்துவிட்டு விடியுமுன் வீடு திரும்பிவிடுவாராம்.

பெரியானை கண்டியில் இருக்கும்வரை தம்மை மற்றையோருக்குக் காட்டிக் கொள்ளாது வாழ்ந்தாலும் கண்டியைவிட்டுப் புறப்படும்போது உயர்ந்த நிலையிலேயே சென்றுள்ளார். மகான்கள் பிறந்த இடத்திலோ அன்றி வளர்ந்த இடத்திலோ சந்நியாசி ஆவது இல்லை. காரணம் அந்த இடத்து மக்கள் அவர்களை அவர்களது பூர்வ ஆச்சிரமம் கொண்டே தான் மதிப்பர். அவர்களது வளர்ச்சியையும் உள்ளுணர்வையும் சத்தியையும் உணர்ந்து கொள்வதில்லை. கள்வன் ஒருவன் சந்நியாசியாகிவிட்டால் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் கள்வன் என்ற பெயரை மறக்கமாட்டார்கள்.

### இந்தியாவில் சித்துக்கள்

ஆனைக்குட்டி சுவாமிகள் இந்தியா சென்று சேர்ந்தார். சாதாரண ஆனைக்குட்டியல்ல. சீவன் முத்தி நிலையடைந்த ஆனைக்குட்டி ஆவார். நவநாதசித்தரும் ஆனைக்குட்டி சுவாமிகளும் ஒருமுறை பல சாதுக்களோடு ஒரு புகையிரத நிலையத்தில் புகையிரதம் ஏறினர். இதைக் கண்ணுற்ற புகையிரத நிலைய அதிபர் ஆனைக்குட்டியையும், நவநாத சித்தரையும் தவிர மற்றைய சாதுக்களையெல்லாம் இறங்குமாறு கட்டளையிட்டார். மற்றைய சாதுக்களோடு இவர்களும் இறங்கினர்.

சுவாமிகள் இருவரும் செல்லலாம் எனப் புகையிரத நிலைய அதிபர் கூறினார். எமது சகோதரங்களுக்கு இடம் இல்லையென்றால் நாமும் போகவில்லை என்று சாதுக்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து நடந்து போய் பக்கத்திலுள்ள ஒரு காட்டில் தங்கினர். காட்டில் நெருப்பு மூட்டி சுற்றிவர இருந்து குளிர் காய்ந்தனர்.

புகையிரத இயந்திரம் வேலை செய்து கொண்டே நிற்கிறது. ஆனால் நகர மறுத்து விட்டது. சாரதி தன்னாலான மட்டும் முயன்றார். ஓடாமல் நிற்பதற்குரிய காரணத்தை அவரால் கண்டு கொள்ள முடியவில்லை. பெரிய பெரிய பொறியியலாளர் எல்லாம் வந்து பார்த்து முயன்றனர். எதுவும் கைகூடவில்லை. இயந்திரத்தில் எவ்வித கோளாறும் இல்லை. அப்படியானால் ஏன் ஓட மறுக்கிறது என்ற பிரச்சினையில் ஆழ்ந்தனர். ஏறிய சாதுக்களை இறக்கிவிட்டதுதான் காரணமாய் இருக்கலாம் எனப் பிரயாணி ஒருவர் கூறினார். புகையிரத நிலைய அதிபரும் அதனை அரைகுறையாக ஏற்றுக் கொண்டார். அந்தக் காலத்தில் பெரிய பொறியியலாளர் ஒரு வெள்ளையர். அவரும் இன்னும் சில உயர்தர உத்தியோகத்தரும் சேர்ந்து சாதுக்களைத் தேடிப் புறப்பட்டனர். சாதுக்களைக் காட்டிலே கண்டனர். வீழ்ந்து வணங்கி தமது பிழைகளைப் பொறுக்குமாறு வேண்டிப் புகையிரதத்தை ஓடச் செய்வதற்கு அருள்புரியுமாறு கேட்டு நின்றனர். “சுவாமிகள் எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதை நாங்கள் தவறாமல் நிறைவேற்றி வைப்போம்” என இரந்து கேட்டனர்.

“நாங்கள் பரதேசிகள், உழைப்புப் பிழைப்பு அற்றவர்கள். எங்களிடம் எப்பொழுதுமே பணம் இருக்காது. உங்களைப் போன்ற இல்லறத்தார்கள் தான் உண்ண உணவும் உடுக்க உடையுந் தந்து காப்பாற்ற வேண்டும். **‘துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை’** என்றுதானே வள்ளுவர் கூறியிருக்கின்றார். ஆகையால் எங்களைப்போன்ற சாதுக்களிடம் இருந்து எப்பொழுதேனும் இரெயில் கட்டணம் அறவிடக்கூடாது. இதற்குச் சம்மதமானால், இதனை எழுதிக் கையொப்பம் இட்டுத் தாருங்கள். அதன் பின்பு புகையிரதம் ஒடுவதற்கு வழி பார்ப்போம்” என்று கூறினார்கள்.

இது அந்த வெள்ளைக்காரருக்குப் பெரிய வியப்பாக இருந்தது. தாமே சுவாமிகள் கூறியவாறு எழுதிக் கையொப்பமிட்டுச் சுவாமிகளிடம் கொடுத்தார்கள். சுவாமிகள் மகிழ்வோடு பெற்றுக் கொண்டார்கள். சுவாமிகள் அந்த வெள்ளைக்காரரிடமிருந்தே ஒரு சிகரெற்றை வாங்கிப் பற்றவைத்தார். புகையை இழுத்து வெளியே ஊதினார். என்ன ஆச்சரியம்! 4, 5 மணித்தியாலங்களாக அசையாது நின்ற புகையிரதம் தானாகவே நகரத் தொடங்கியது. இத்தகைய அற்புதங்கள் நிகழ்த்திய மகான்களை யார் நினைக்கின்றார்கள்?

### கொழும்பு மாநகரில் ஆனைக்குட்டி சுவாமிகள்

கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்துக்கும் மருதானைப் புகையிரத நிலையத்திற்கும் இடையில் கப்பித்தாவத்தை என்றொரு இடம் உள்ளது. அந்த இடத்தில் இன்றும் ஒரு கோயில் இருப்பதை யாரும் அவதானிக்கலாம். அங்கே ஈனமுத்து என்றொருவர் வசித்து வந்தார். அந்தக் காலத்தில் றிக்சோ இழுக்கும் கூட்டத்தினருக்கு இந்த ஈனமுத்து தலைவர். றிக்சோ இழுப்பவர்கள் நாளாந்தம் தமது உழைப்பிற்கேற்ப ஈனமுத்துவுக்குக் கமிஷன் கொடுப்பார்கள். அதைக் கொண்டே அவர் வாழ்க்கை நடைபெற்றது. கமிஷனில் அரைவாசிக்கு மேல் தனது கள்ளுச் சாராயத்திற்காகச் செலவு செய்வார். தினமும் எந்த நேரமும் குடிபோதையில் மூழ்கி இருப்பவர்களைத் ‘தினவெறியர்’ என்று அழைப்பார்கள். இந்த ஈனமுத்துவும் அத்தகையவரில் ஒருவரே, ஆனால் இந்தக் குடிகாரனுக்குச் சாதுக்கள் சாமிகள் என்றால் ஒரு தனிமதிப்பு. சாதுக்களிடம் பத்தி செலுத்துவதும் அவர் செய்த பூர்வ புண்ணியம் போலும்.

இத்தகைய ஈனமுத்துவிடம் தான் பெரிய ஆனைக்குட்டி சுவாமிகள் பல இடங்களிலும் சுற்றித் திரிந்துவிட்டுக் கடைசியில் வந்து சேர்ந்தார்கள். சுவாமிகள் ஒரு சீவன் முத்தர். விருப்பு வெறுப்பற்றவர். ஈனமுத்து தான் உண்பதையும் தான் குடிப்பதையும் சுவாமிகளுக்குக் கொடுப்பார். கொடுப்பது எதுவானாலும் அதனை சுவாமிகள் வாங்கி உண்டு விடுவார். சுவாமிகளைத் தரிசிக்க வருபவர்கள் எத்தனை பேரானாலும் கடன் வாங்கியும் அத்தனை பேரையும் ஈனமுத்து உபசரிப்பார்.

எறும்பூரக் கல்லும் குழியும் என்பது பழமொழி. தினமும் சுவாமிகளுடைய தரிசனைக்காக வரும் ஏழைகளின் தொகை கூடிக்கொண்டே வந்தது. அதனால் ஈனமுத்துவின் பணச் சேமிப்பும் காலியானது. ஈனமுத்துவின் சொந்தச் செலவிற்கே தட்டுப்பாடு ஏற்பட்டது. இளையான்குடிமாற நாயனாரின் பத்தியை சிவபெருமான் துலக்கியது போல ஈனமுத்தரை ஆனைக்குட்டி சுவாமிகள் துலக்கியிருக்கலாம். கைப்பொருள் இல்லாத காலத்திலும் இளையான்குடிமாற நாயனார் அடியார்களை அன்போடு உபசரிப்பார் என்பதை உலகுக்குக் காட்டவே சிவபெருமான் குபேரனாக வாழ்ந்த மாறனாரை கோவணாண்டியாக்கினார். வீட்டில் ஒரு பொருளும் இல்லாத நேரத்திலே அதுவும் நடுச்சாமத்தில் மழை சோனாவாரியாகப் பெய்யும் சமயத்தில் சிவபெருமானே சிவனடியாராக வந்து மாறனாரிடம் பசியாற்றுமாறு கேட்டார். மாறனார் கொடுத்துப் பழகியவர் அல்லவா? வயலில் விதைத்த நெல்மணிகளை வாரிவந்து வறுத்துக் குற்றி அன்னமிட்டுச் சிவபிரானாகிய அடியாரையே திகைக்க வைத்துவிட்டார். இத்தகையதொரு நிலைதான் ஈனமுத்துவுக்கும் ஏற்பட்டது.

திருச்சிற்றம்பலம்

ஆக்கம் : ஆத்மசோதி முத்தையா சுவாமிகள்

தொகுப்பு : சிவத்திரு.வடிவேலு கங்காளன்

## கோவிட் தீநுண்மிப் பரவல் காலத்தில் சிவப்பேறு அடைந்தவர்களுக்குரிய வழிபாடு...




(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பின்னர் சிவப்பேறு அடைந்த உங்கள் பெற்றோர் அல்லது உறவினரின் உயிர் மறுபிறவி ஒன்றில் மீண்டும் மாளாமல் சிவப்பரம் பொருளின் பாதங்களில் நிலைபெற வேண்டி திருவாசகத்தில் திருப்பெருந்துறையில் அருளிய வாழாப் பத்தினை ஓதுக

பாரொடு, விண்ணாய்ப் பரந்த எம் பரனே!
பற்றுநான் மற்றுஇலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய், சிவபுரத்து அரசே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
ஆரொடு நோகேன்? ஆர்க்கு எடுத்து உரைக்கேன்?
ஆண்ட நீ, அருளிலை ஆனால்,
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
'வருக" என்று அருள் புரியாயே. (#TV28)

பின்னர் சிவப்பேறு அடைந்த உங்கள் பெற்றோர் அல்லது உறவினரின் உயிரை சிவன் தன்னுள் ஈர்த்துக் கொண்டு அடைக்கலம் கொடுக்க ஃ தர வேண்டும் என்று எண்ணி திருவாசகத்தில் திருப்பெருந்துறையில் அருளிய உயிர் உண்ணிப்பத்து, அடைக்கலப் பத்து பதிகங்களை ஓதுக

பைந்நாப்பட அரவுஏர் அல்குல் உமைபாகம் அதுஆய்,என்
மெய்ந்நாள்தொறும் பிரியா,வினைக்கேடா! விடைப்பாகா!
செந்நாவலர் பரசும் புகழ்த் திருப்பெருந்துறை உறைவாய்!
எந்நாள் களித்து, எந்நாள் இறுமாக்கேன், இனி, யானே?
உண்ணிப்பத்து (#TV34)

செழுக் கமலத்திரள் அன நின்
சேவடி சேர்ந்து அமைந்த,
பழுத்த மனத்து அடியர் உடன்
போயினர் யான், பாவியேன்
புழுக்கண் உடைப் புன்குரம்பைப்
பொல்லாக், கல்வி ஞானம் இலா
அழுக்கு மனத்து அடியேன்
உடையாய்! உன் அடைக்கலமே! அடைக்கலப் பத்து (#TV24)

**புரட்டாசி குருபூசைகள்**

| | | |
|---|---|---|
| உருத்திரபசுபதியார் | - | புரவி (அசுவினி) |
| திருநாளைப்போவார் | - | சகடு (உரோகிணி) |
| ஏனாதிநாதர் | - | கடைக் குளம் (உத்தராடம்) |
| நரசிங்கமுனையரையர் | - | செக்கு (சதயம்) |

அவ்வாறு ஈர்க்கப் பட்ட உயிரானது இறைவனையே சிக்கெனப் பிடிக்க வேண்டும் என்று எண்ணி திருவாசகத்தில் திருத்தோணிபுரத்தில் அருளிய பிடித்தபத்து ஓதுக

உம்பர்கட்கு அரசே! ஒழிவுஅற நிறைந்த
யோகமே! ஊற்றையேன் தனக்கு
வம்புஎனப் பழுத்து, என் குடிமுழுது ஆண்டு
வாழ்வுஅற வாழ்வித்த மருந்தே!
செம்பொருள் துணிவே! சீர்உடைக் கழலே!
செல்வமே! சிவபெருமானே!
எம்பொருட்டு, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்குஎழுந்து அருளுவது, இனியே? (#TV37)

அவ்வாறு சிக்கெனபிடித்த உயிரானது இறைவனையே அடைக்கலம் என்று எண்ண வேண்டும் என வேண்டி திருவாசகத்தில் திருப்பெருந்துறையில் அருளிய பிரார்த்தனைப் பத்து ஓதுக

கலந்து, நின்னடியாரோடு அன்று
வாளா களித்து இருந்தேன்
புலர்ந்து போன காலங்கள் புகுந்து
நின்றது இடர், பின்நாள்
உலர்ந்து போனேன் உடையானே! உலவா
இன்பச் சுடர் காண்பான்
அலந்து போனேன் அருள்செய்யாய், ஆர்வம்
கூர அடியேற்கே. (#TV32)

இவ்வாறு பேரின்பப்பேறு பெற்ற உயிர் தான் பெற்ற பேற்றினை எண்ணி மகிழ்வதாக நினைத்து திருவாசகத்தில் திருத்தில்லையில் அருளிய ஆனந்த மாலை மற்றும் அச்சோப் பதிகங்களை ஓதுக

மின்நேர் அனைய பூங்கழல்கள்
அடைந்தார் கடந்தார், வியன் உலகம்
பொன்நேர் அனைய மலர்கொண்டு
போற்றா நின்றார், அமரர் எல்லாம்
கன்நேர் அனைய மனக்கடையாய்,
கழிப்புண்டு, அவலக் கடல் வீழ்ந்த
என்நேர் அனையேன் இனி, உன்னைக்
கூடும் வண்ணம், இயம்பாயே. - ஆனந்த மாலை (#TV50)

முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனை,
பத்திநெறி அறிவித்துப்,
பழவினைகள் பாறும்வண்ணம்,
சித்தமலம் அறுவித்து,
சிவம்ஆக்கி,எனை ஆண்ட,
அத்தன்,எனக்கு அருளிய ஆறு,
ஆர்பெறுவார்? அச்சோவே! - அச்சோப் பதிகம் (#TV51)

எனத் திருவாசகத்தினைப் பாடி தீபம் காட்டுக.

வீடுபேறு (மோட்சம்) தீபம் ஏற்றல்

ஒரு பெரிய தீபத்தை ஏற்றி அதில் சிவபெருமானை எழுந்தருளப் பண்ணுக
சிவபெருமான் என்று நான் அழைத்து ஏத்த
தவ பெருமான் என்று தான் வந்து நின்றான்
அவ பெருமான் என்னை ஆள் உடை நாதன்
பவ பெருமானை பணிந்து நின்றேனே - திருமந்திரம்

சிறிய தீபத்தில் உங்கள் சிவப்பேறு அடைந்த பெற்றோர் அல்லது உறவினரின் உயிரினை அழைத்து எழுந்தருளவைத்து (அம்மாவே எழுந்தருளுக) திருவாசகத்தில் திருப்பெருந்துறையில் அருளிய அதிசயப் பத்து பதிக்கத்தினை ஓதி ஒவ்வொரு பாட்டு முடிவிலும் அச்சிறிய தீபத்தை அசைத்து பெரிய தீபத்தின் (சிவனிடம்) அருகில் கொண்டு சென்று சேர்க்க.

வைப்பு, மாடு என்றும் மாணிக்கத்து ஒளி என்றும்
மனத்திடை உருகாதே,
செப்பு நேர்முலை மட வரலியர் தங்கள்
திறத்திடை நைவேனை
ஒப்பு இலாதன, உவமனில் இறந்தன,
ஒண்மலர்த் திருப்பாதத்து
அப்பன், ஆண்டு, தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டோமே! (#TV51)

இறுதியில் சிறிய தீபத்தில் உள்ள திரியை பெரிய தீபத்தில் உள்ள திரியுடன் சேர்த்து (உயிர் சிவனிடம் முற்றாக ஐக்கியம் அடைதல்) திருமந்திரத்தில் பின்வரும் பாடலை ஓதுக

அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிவதத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன் கூடல் பேரின்ப மாமே - திருமந்திரம்

உங்கள் சிவப்பேறு அடைந்த பெற்றோர் அல்லது உறவினரின் உயிர் எல்லாம்வல்ல சிவபரம்பொருளின் சிவபுரத்தினை அடைந்து, அவருடன் இணைந்து மீண்டும் பிறப்பில்லாப் பேரின்பப் பெருவாழ்வினை அடைய வேண்டுமென்று



சிவபெருமானிடம் வேண்டி நீத்த அதே திதி மீண்டும் வரும் வரையாவது தொடர்ந்து ஒவ்வொரு நாளும் திருவாசகத்தில் சிவபுராணத்தினை ஓதி எல்லாம்வல்ல சிவபுரத்து அரசிடம் விண்ணப்பம் வைத்து வழிபாடு ஆற்றுக.

உதாரணமாக வளர்பிறை ஒருமைப் பிறைநாளில் அதாவது திதியில் (ஏகாதசியில்) உயிர் நீத்தால் அடுத்த திங்கள் (மாதம்) வளர்பிறை ஒருமைப் பிறைநாள் வரும் வரையாவது தினமும் சிவபுராணம் ஓதுக. பின்னர் ஓராண்டிற்கு ஒவ்வொரு திங்களும் (மாதமும்) வருகின்ற அதே திதியில் சிவபுராணம் ஓதி வழிபடுக. அவர்களின் படத்திற்கு திருவிளக்கு ஏற்றி, உணவு படைத்தது வழிபாடு செய்க. இயலுமாயின் சிவனடியார்களுக்கு அத்திதியில் உணவு மற்றும் ஆடை தானமாகக் கொடுக்கலாம்.

யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு ஒரு இன்னுரை தானே - திருமந்திரம்

சிவத்திரு.வள்ளிகாந்தன் நிகரிலரசு
தென்னாடு சிவமடம் - யாழ்ப்பாணம்

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரியபுராணம்:
## அடியவர் தங்களைக் கண்டால் குணங்கொடு பணியும் – குலச்சிறையார்



சிவத்திரு.
பா.சிவமாதவன்
புதுக்கோட்டை

செந்தாமரை காடனைய மேனியுடைய சிவபெருமான், யாண்டுமிருந்து உலகை படைத்தும், காத்தும், கரந்தும், அருளியும் , மறைத்தும் விளை யாடிக் கொண்டிருக்கிறான். அவனை ஒழிய அமரரும் இல்லை அவனன்றி செய்யும் அருந்த வமும் இல்லை என்பர் திரு மூலநாயனார். அப்பேற்பட்ட பரம்பொருளான பார்போற்றும் பரமசிவன், அவனுக்கு பழம் பதியாவது பாண்டியநாடு, அப் பாண்டிய நாட்டில் பழந்தமிழ் இயம்பும் பரவுவார் இடர்களையும் பரமனானவன் எல்லாம் வல்ல சித்தனாக, விறகு விற்கும் வித்தகனாக, வளையல் விற்கும் வாணிபனாக, பிரம்படிப்பட்ட பித்தனாக, முத்திதரும் மூர்த்தியாக இருந்து திருவிளையாடல் புரிந்தான்.

இவ்வளவு பெரும் புகழுடைய சைவத்திருநாடான பாண்டிய நாடு தன்நிலை இழந்து சமணர்கள் பிடியில் சாய்ந்திருந்தது, சங்கொத்த நீற்றனான சங்கரன் சாய்ந்த சமயத்தை அவனால் ஆய்ந்த பசுந்தமிழ் வல்ல பைந்தமிழ் சம்பந்த பெருமானைக் கொண்டு, சீர்தூக்க எண்ணினான். அதற்கேற்றாற் போல் பாண்டிய மன்னனான கூன்பாண்டி யனுக்கு இடப்பாகமாக இருந்தவர் சைவத்தின் குலத்தெய்வம் வளைக்கை கைமடமானி எனும் மங்கையர்க்கரசியார். அவருக்கு உறுதுணையாக,

**“வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு**
**ஐந்துடன் மாண்டது அமைச்சு.”**

என்ற வள்ளுவரின் வாக்கின் பொருளாக நின்றவர் குணக்குன்றான குலச்சிறையார் எனும் நல் அமைச்சர். குலச்சிறையார் பிறந்த புண்ணிய பூமி அவர்புகழை சுமக்கின்ற இடமான மணமேற்குடி எனும் பதியாகும். இது தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் திருவாசகம் பிறந்த, மணிவாசகம் நடந்த திருப்பெருந்துறைக்கு அருகாமையில் உள்ளது. மணமேற்குடியில் பிறந்த நாயனார் மாதேவன் அருளை நிரம்பப்பெற்றதால் மன்னனுக்கு மதி சொல்லும் மாண்புடையவராக திகழ்ந்தார். பாண்டிய திருநாட்டின் பண்புடை அமைச்சராக பணிஅமர்ந்தார். மங்கையர்க் கரசியாரின் மனதில் மதிப்புடையிடத்தில் இருந்தார். பாண்டிய நாடு பாங்குற திகழ பூந்தராயில் தோன்றி சைவ வேந்தராய் மிளிர்ந்த சிவம் பெருக்கும் பிள்ளையாருக்கு தகவலை பாண்டிய தேவியாருடன் ஆலோசித்து அனுப்பினார் அடியார். திருமறைக்காட்டில் மறைஞான ஞான முனிவரான திருஞானசம்பந்தரிடம் செய்தவத்தால் செய்தியும் செவ்வனே சென்றது. செந்தாமரை திருமுகமுடைய தீந்தமிழாளியான திருஞானசம்பந்தரும் வரவேற்று வாழ்த்தி வழியனுப்பி வைத்தார். அடியார் புடைசூழ சைவம் வாழ பாண்டிய நாட்டிற்கு வந்தனர், பரமர் தாள்தொழும் பண்பினர். மழவிடைக்கன்றாய் வானத்தின் மிசையின்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்தாய் எழுந்தருளிய சிவக்கன்றின் சிவிகையின் முன் பரவி தொழுது, பணிந்து, தாழ்ந்து வீழ்ந்தனர் குலச்சிறையார் என்னும் குணக்குன்றனார். இதனை சேக்கிழார் பெருமான் மிகச் சிறப்பாக விளக்குகிறார். அப்பாடல்,

**“நிலமிசை பணிந்த குலச்சிறை யாரை**
**நீடிய பெருந்தவத் தொண்டர்**
**பலர் முன்னைணந்து வணங்கி மற்றவர் தாம்**
**படியின் நின் றெழாவகை கண்டு**
**மலர்மிசைப் புத்தேள் வழிபடும் புகலி**
**வைதிகச் சேகரர் பாதம்**
**குலவி அங் கணைந்தார் தென்னவ னமைச்சர்**
**குலச்சிறை யார் எனக் கூற”**

குலச்சிறையார் திருஞானசம்பந்தருக்கு முன்னால் எழாமல் பணிந்து கிடந்தார். இந்த வேளையில் நாயனார் **“மெய்தான் அரும்பி விதிர்விதித்து உன் விரையார் கழற்கு என் கைதான் தலைவைத்து கண்ணீர்த் ததும்பி வெதும்பி உள்ளம் பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி”** எனும் மணிவாசகரின் திருவாசக வரியின் வடிவினராய் நின்றனர். ஏனெனில் நிறைந்த இருளை அகற்ற ஞாயிறு வருவதைப்போல் சமண இருளில் மூழ்கிக் கிடந்த சைவநாடான பாண்டிய நாட்டை மீண்டும் திருநீற்று ஒளி வீசும் நாடாக மாற்ற சிவனாரின் மகனாக, சிங்கமாக வந்த சிரபுரக்கோனை கண்டதால் நாயன்மார் சைவம்



வென்றது எனும் நிலையில் மூழ்கிக்கிடந்தார்.


திருஞானசம்பந்தப் பெருமான் அடியார்களிடம் கேட்க, இவர்தான் பாண்டிய நாட்டின் அமைச்சர் என்கிறனர். உடனே காழிப்பிள்ளையார் சிவிகையிலிருந்து இறங்கி விரைந்து சென்று, தரையில் கிடந்தவரை தம் கரங்களால் எடுத்தார். பின்பு குலச்சிறையாரிடம், சிவக்கன்றான சம்பந்தர் மதுர வாக்களிக்கிறார். சிறப்பான அந்த பெரியபுராண வரிகள்,

**“செம்பியர் பெருமான் குலமகளார்க்குந்**
**திருந்திய சிந்தையீர் உமக்கும்**
**நம்பெரு மான்தன் திருவருள் பெருகும்**
**நன்மைதான் வாலிதே என்ன”**

என்னே! அற்புதமான வரிகள் “எனதுரை தனதுரை” என்று திருஞான சம்பந்தப்பெருமான் தன்செயல் யாவுமே இறைவன் செயல் என்று குறிப்பிடுவார். இங்ஙனம் பாண்டிய அமைச்சருக்கு கூறிய வார்த்தையானது குருவாக திருவாய் மலர்ந்த திருவார்த்தை ஆகும். எனவே குலச்சிறையாரும் பெரும் மகிழ்வுற்றார். அதன் பிறகு மறுமொழியாக, குலச்சிறையார் சம்பந்தரிடம் வினவுகிறார் அவ்வார்த்தையானது, ஒரு நாட்டையே சீர்தூக்கும் சிறப்புச்செய்யும் அற்புதமான சொற்கள் நிரம்பியது. இதனை குலச்சிறையார் சொல்லுவதாக சேக்கிழார் பெருமான் வைத்திருக்கும் விதம் நம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைக்கிறது.

**“தொண்டர் மனம் களி சிறப்பத்**
**தூய திருநீற்று நெறி**
**எண் திசையும் தனிநடப்ப**
**ஏழ்உலகும் குளிர்தூங்க**
**அண்டர் குலம் அதிசயிப்ப**
**அந்தணர் ஆகுதி பெருக**
**வண் தமிழ் செய்தவம் நிரம்ப**
**மாதவத்தோர் செயல் வாய்ப்ப”**

என்ற வரிகளுக்கு சொந்தக்காரர் எதிரே நிற்கிறார். **“யார்க்கும் முன்னவனே முன்நின்றால் முடியாத பொருள் உளதோ”** என்ற பெரியபுராண வரியை போன்று குலச்சிறையார் நம்பிக்கையாகக் கூறுகிறார். அப்பாடல்.



**“சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்**
**இனிஎதிர் காலத்தின் சிறப்பும்**
**இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்**
**என்றைக்கும் திருவருள் உடையேம்**
**நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்**
**நற்றமிழ் வேந்தனும் உய்ந்து**
**வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்**
**மேன்மையும் படைத்தனம் என்பர்.”**

அதன்பிறகுதிருமடம்ஒன்றில்ஆளுடைப்பிள்ளையாரையும் அவருடன் வந்த அடியார்களையும் தங்க வைக்கிறார். அந்த மடம் தான் தற்போது மதுரை ஆதினமாகத் திகழ்கிறது. அதன்பிறகு அதைப்பொறுக்காத சமணர்கள் மன்னனிடம் ஆணை வாங்கி தீ மூட்டுகின்றனர். காழிப்பிள்ளையாரும், கண்ணுதல் பெரும் கடவுளிடம் விண்ணப்பம் வைத்து, பையவே சென்று பாண்டியர்க்கு ஆகவே என்ற உடன் சைவத்தை அவன் பற்ற, கூன் பாண்டியனை வெப்பு நோய் பற்றியது. அந்த வேளையில் பாண்டியர் தேவியும், குலச்சிறையாரும் மனம் வெதும்பி நின்றனர். இருப்பினும்,

**“அஞ்சுவது யாது ஒன்றும் இல்லை, இனி**
**அஞ்ச வருவதும் இல்லை”**

என்ற வரியின் வடிவாம் சிவக்கன்று, சிங்கம் போல நின்றது. அடுத்தநாள் காலையில் ஆலவாயில் சந்தித்த பிறகு சம்பந்தப் பெருமான் செந்தமிழ் சொக்கருக்கு தமிழ் மறைபாடுகிறார். அப்பாடல் மங்கையர்க்கரசி எனத்தொடங்கும் திருப்பாடல்.

இப்பதிகத்தில் மிகப்பெரிய சிறப்பு என்னவென்றால் முதல்பாட்டில் மங்கையர்க்கரசியாரையும் இரண்டாவது பாட்டில் குலச்சிறையாரையும் பாடியதாகும். காழிப்பிள்ளையார் இறைவனை நோக்கி பாடுவதை சிறப்பாகக் கொண்டவர். அவருடைய திருவாக்கில் இடம்பெற்ற அடியார் என்ற சிறப்பையும் குலச்சிறையார் பெற்றது தனிச்சிறப்பாகும்.

**“கணங்களாய் வரினும் தமியராய் வரினும் அடியவர்**
**தங்களைக் கண்டால் குணங்கொடு பணியுங் குலச்சிறைகுலாவு”**

என்று சிறப்பித்து இருக்கிறார். அது மட்டுமன்றி புனல் வாதத்தின் போது வைகை ஆற்றின் நீரோட்டத்தை எதிர்த்து சென்ற, தமிழ் பதிக ஏடுகளை எடுப்பதற்காக பரியேறி சென்ற, அமைச்சரைப் பரிவாகப் பார்த்தார் பைந்தமிழ் ஆழியார். சமணக்கடலில் இருந்து கரையேறிய பாண்டிய நாட்டினை போல சைவ ஏடும் கரை ஏறியது.

எனவே அப்பேற்பட்ட சிறந்த அமைச்சர் ஆகவும், சீர்மிகு சிவனடியாராகவும், திகழ்ந்த குலச்சிறை நாயனார் பெருந்தொண்டு புரிந்து, பெரும்பதம் அருளும் அங்கயற்கண்ணி உடனாய ஆலவாய்சொக்கனின் திருவடி நிழலை ஆவணிமாத அனுச நாண்மீன் திருநாளில் அடைந்தார். பெரும் தொண்டிற்கும், சிறப்பிற்கும் உரிய நாயனாரின் திருவடிகளை நாளும் போற்றுவோம்.

**திருச்சிற்றம்பலம்**

# சிவபூமியில் சிவனைத் தேடி -

## கி.மு 2ம் நூற்றாண்டுச் சான்றுகளுடன் உள்ள அம்பாறை சங்கமன் கண்டியில் ஆதிகாலச் சிவன் கோயில்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு



இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தைப் போன்று, அம்பாறை மாவட்டமும் ஆதி காலம் தொட்டு தமிழர் பண்பாடு, அவர்களின் பாராம்பரியங்கள், சைவப்பண்பாடு அதன் நம்பிக்கை சார்ந்த வழிபாட்டு மரபுகள், செழுமையான வாழ்க்கைக் கோலங்களைக் கொண்ட பெருநிலப் பரப்பாகும். பண்டைய காலம் தொட்டு வாழ்ந்த இப்பிரதேச தமிழ் மக்களிடத்தில் சிவ வழிபாடும், முருக வழிபாடும், பிள்ளையார் வழிபாடும், கண்ணகி வழிபாடும் காலூன்றியிருந்தமையை, அங்கு பல இடங்களில் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள், தொல்லியல் சின்னங்கள், பண்டைய ஓலைச்சுவடிகள், மற்றும் இலக்கியங்கள் என்பன சான்றுரைக்கின்றன.

### சங்கமன் கண்டி

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் கிராமத்திலிருந்து சுமார் 12 மைல் தூரத்திலும், உகந்தையிலிருந்து சுமார் 55 மைல் தூரத்திலும் சங்கமன் கண்டி எனும் இடம் அமைந்துள்ளது. இவ் இடம் மலைப் பிரதேசமாகவும், அடர்ந்த காட்டுப் பிரதேசமாகவும் காட்சியளிக்கின்றது. காட்டின் மத்தியில் ஒரு பழமையான பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலைக் காட்டுப் பிள்ளையார் கோயில் என்று அழைப்பர். இக்கோயிலிற்குச் சற்றுத் தொலை தூரத்தில், ஒரு பழம் பெரும் சிவாலயம் இருந்தமைக்கான தொல்லியல் எச்சங்கள் காணப்படுகின்றன. தற்போது அங்குள்ள மலையொன்றில் முருகன் கோயில் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. கதிர்காம யாத்திரை செல்பவர்களுக்கு ஓர் புனித இடமாக இப்பிரதேசம் அமைந்திருக்கின்றது. தலயாத்திரை செல்பவர்கள் இப்பிள்ளையார் கோயிலைத் தரிசித்து, மலையில் அருவமாகவும் உருவமாகவும் நிறைந்து அருளாட்சி புரியும் இலிங்கப் பெருமானின் அருளாசியும் பெற்றே தமது பயணத்தைத் தொடரும் பண்டைய பூர்வீக இடமாகவும் விளங்கி வருகின்றது. செவிவழிமரபுக் கதைகளின் படி இங்கு பல முனிவர்களும், மகான்களும் தவம் புரிந்து சிவனருள் பெற்றதாகவும் சொல்லப்படுகின்றது.

வரலாற்று அடிப்படையில் நோக்கும் போது, தென் கிழக்கிலங்கையில் வாழ்ந்த பூர்வீகக் குடிகளான நாகர் குலத்தவர்களது இராசதானியாக சங்கமன் கண்டி விளங்கியுள்ளது. இவ் இடம் பற்றிய தகவல்களை அறிவதற்கு, பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் எழுதிய இலங்கைத் தமிழர் வரலாறு - கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும் என்ற நூலிலும், ஆய்வாளர் எஸ். திருச்செல்வம் எழுதிய தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்து சமய வரலாறு என்ற நூலிலும் கண்டு கொள்ளலாம் .

சங்குமன் எனும் நாகர் குலத்து சிற்றரசனால் ஆட்சி புரிந்த தலை நகரமாதலால் சங்குமன் கண்டி என்ற பெயரைப் பெற்றது என்பர். இங்கு கிடைத்துள்ள ஈமக் கல்லறை மூடி ஒன்றின் மேல் " வேள் நாகன் மகன் வேள் கண்ணன்" எனப் பொறிக்கப்பட்ட தமிழ்ப் பிராமிச் சாசனம் இங்கு மூன்று தலை முறைகளைச் சேர்ந்த வேளிரைப் பற்றிய குறிப்பைத் தருவதனால் கிழக்கு மாகாணத்திலே ஆதி வரலாற்றுடன் தொடர்புடைய தமிழர்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பதை ஐயமின்றி அறிய முடிகின்றது.

இவ் வனப்பகுதியிலும், மலைப் பகுதிகளிலும் பல கட்டடச் சிதைவுகளும், செங்கற் கட்டுமான அழிபாடுகளும், கற்தூண்களும், மண்டப அமைப்புக்களும், நீர்த்தடாகம் (கேணி), கற்குளியல் தொட்டிகள், கற்படுக்கைகள், நடுகல் கல்லறைகள், பானை ஓடுகள் போன்ற தொல்லியல் எச்சங்கள் பலவற்றை ஆய்வு செய்த சரித்திரவியலாளர்கள் சில தொல்பொருட் சின்னங்களின் காலம் கி.மு 2 ஆம் நூற்றாண்டுக்குரியவை என்றும், இன்னும் சில சின்னங்கள் 8ஆம் நூற்றாண்டுக்குரியவை என்று முடிவு கூறுகின்றனர்.

இது பற்றி இலங்கைத் தமிழர் வரலாறு என்ற நூலில் 315 ஆம் பக்கத்தில் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**“கிழக்கு மாகாணத்திலே ஆதி வரலாற்றுக் காலத் தமிழர் குடியிருப்புக்கள் தொடர்பான பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படும் இடங்களில் சங்கமன் கண்டி ஒரு முக்கியமான தலமாகும். அங்கு இரு வேறு இடங்களிலே தொல்பொருட் சின்னங்கள் செறிந்து காணப்படுகின்றன. அவற்றிலொன்று நான்காம் நூற்றாண்டு வரை குடியிருப்பு பகுதியாக விளங்கியது. அதற்குப் பிற்பட்ட தொல்பொருட் சின்னங்கள் காணப்படவில்லை. அங்குள்ள கல்வெட்டுக்கள் தமிழில் எழுதப்பட்டுள்ளது. அவை தமிழ்ப் பிராமி வடிவங்களில் எழுதப்பட்டுள்ளன.”**

**“இரண்டாவது இடம் நீண்ட கால வரலாற்றினைக் கொண்டது போலத் தெரிகின்றது. அங்கு இரு வேறு காலங்களுக்குரிய பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஆதியானவை. நாகரோடு தொடர்புடையவை. அங்கு கி.பி 400 வரையான காலத்திற்குரிய தமிழ்க் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை தமிழ்ப் பிராமி வடிவங்களில் எழுதப்பட்டவை. பிற்பட்ட காலத்தில் அங்கு குறிப்பிடத்தக்களவு சமூக பண்பாட்டு மாற்றங்கள் ஏற்பட்டது போலத் தெரிகின்றது. கி.பி ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பல கல்வெட்டுக்கள் காணப்படுகன்றன. அவை மொழிமாற்றம், சமயமாற்றம், வரிவடிவமுறையில் மாற்றம் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றன.”**

எனவே தமிழ் மொழியைப் பேசிய பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் தங்களது சமய சமூக நம்பிக்கை மரபுகளோடு இயைந்து வாழ்ந்த பிரதேசமாக சங்கமன் கண்டி விளங்கியுள்ளது. தற்போது இலங்கையின் தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பிரதேசமாகவும் விளங்குகின்றது.

### திருத்தல வரலாறு

கிழக்கிலங்கையில் ‘கண்டி’ என்னும் பெயரோடு அழைக்கப்படும் சங்கமன் கண்டியில் வேளிர் குல பெருங்கற்காலப் பண்பாடோடு மிக நெருங்கிய தொடர்புடைய நாகர்குல வம்சம் வாழ்ந்ததாகவும், உறுதியான நிலையில், பூர்வீக காலத்தில் மாடங்கள் பல கொண்ட கோபுரங்களை உடைய மூன்று கோயில்கள் இப்பிரதேசத்தில் இருந்ததாகவும், பின்பு அக்கோயில்கள் போர்த்துக்கீச தளபதி அசுவிடோவினால் அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அவை திருக்கோவில் சித்திர வேலாயுதர் கோயில், மற்றவை சங்கமன் கண்டி சிவாலயம் மற்றும் பிள்ளையார் கோயில் என்பனவாகும்.

கி.பி 1498 இல் வாஸ் கொடகாமா என்னும் போர்த்துக்கேய மாலுமி தனது கடற்பிரயாணத்தின் போது கண்ட, சங்கமன் கண்டி மலையையும் அதன் அருகாமையில் தென்பட்ட கோயில்களையும் தமது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார். இதற்கேற்றால் போல் தற்போதைய சங்கமன் கண்டி பிள்ளையார் கோயிலின் வடமேற்கில் சிறிது தொலைவில் மலைப்பாறைத் தொடரின் வடக் கெல்லையில், இன்றும் ஆலயச் சிதைவுகளை அவதானிக்க முடிகின்றது. அச் சிதைவுகளின் எச்சங்களைக் கொண்டு, அங்கு ஓர் சிவாலய இருப்புக்கான ஊகங்கள் பல ஆய்வாளர்களால் முன் வைக்கப்பட்டும் வருகின்றது.

தற்போது மலையில் ஆவுடையார் அற்ற மூன்று சிவலிங்கங்கள் காணப்படுகின்றது. அவை அவ்வப்போது காட்டு யானைகளின் அட்டகாசத்தினால் மலையில் இருந்து உருட்டி விடப்படுவதாகவும், பின்பு அங்கு வழிபாட்டிற்குச் செல்லும் பத்தர்கள் அவ் இலிங்கங்களை மலையில் வைத்து வழிபாடு இயற்றப்பட்டும் வருவதாகவும், இப்பிரதேசவாசிகள் கூறுகின்றனர். தற்போது உள்ள காட்டுப் பிள்ளையார் கோயிலிலும், ஆவுடையார் அற்ற இலிங்கம் பூசைக்கு பயன்படுத்தப்பட்டு வருவதிலிருந்து, சங்கமன் கண்டி சிவ வழிபாட்டின் எச்சங்களாக இவற்றை நோக்க முடிகின்றது.

கோணேசர் கல்வெட்டின் படி குளக்கோட்டு மகாராசா காலத்தில் கோண மலையாரின் எல்லைப் பூமியாக மேற்கே முனீசுவரத்திலும், வடக்கே கரம்பகத்திலும், கிழக்கே வங்கக் கடலோரத்திலும், தெற்கே சங்கமன் கண்டியிலும் சூலங்கள் நடப்பட்டதாகக் குறிப்புகள் உள்ளது. இந்த அடிப்படையில் சூலம் நாட்டப்பட்ட எல்லைச் சிவன் கோயில் ஒன்று சங்கமன் கண்டியில் இருந்திருக்க வாய்ப்பிருந்திருக்கின்றது.

இன்று உள்ளவர்கள் அனைவராலும் அறியப்பட்ட சிவாலயமாக சங்கமன் கண்டி விளங்கியிருந்தாலும், அவற்றின் எச்சங்களைக் காப்பதற்கும், அவ்விடத்தில் மீள ஓர் சிவாலயம் எழுப்பப்படுவதற்கும் இன்னும் முயற்சிகள் கைகூடவில்லை என்பது மன வேதனைக்குரியது. பண்டைய சைவமரபை தழைக்கச் செய்யும் நோக்கோடும், இளம் சமுதாயத்தினரிடையே சைவத்தமிழ் பற்றினை வித்திடும் நோக்குடனும், வரலாறுகளை விழுமியங்களை தக்கவைக்கும் நோக்குடன் இலங்கை மற்றும் புலம் பெயர் நாடுகளில் உள்ள தமிழர் அமைப்புகள் கூடிய கவனம் எடுக்கவேண்டுமென்பது பலரது அவாவாகும்.

பண்டைய சைவ மரபை புலப்படுத்தும் முகமாக, அன்று, விருப்பாக்கன் என்பவரால் வாரிவனத்தில் உருவாக்கப்பட்டு, சோழர்காலத்தில் பெரிதாக்கப்பட்டு, பின் போர்த்துக்கீசர்,



சங்கமன் கண்டி
சிவவழிபாட்டு எச்சங்கள்

ஒல்லாந்தர் காலத்தில் அழிக்கப்பட்ட தான்தோன்றி சிவன் கோயிலின் இலிங்கத்தை சாவகச்சேரியில் மத்திய போக்கு வரத்து நடுவத்திற்கு அண்மித்த இடத்தில் புதிய கோயிலமைத்து, சோழர்கால வாரிவனலிங்கத்தினை வைத்து, மக்கள் வழிபட்டு வந்தனர். மீண்டும் இறைவன் திருவருளால், சைவ மாணவர் சபையின் ஏற்பட்டில் வாரிவனத்தின் நடுவிலே நீதிமன்ற வளாகத்தின் முன் புதுப்பொலிவுடன் கருங்கல் கருவூலமாகவும் புதிய இலிங்கமாக வாரியப்பர் எழுந்தருளி செந்தமிழில் வழிபடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. சங்கமன் கண்டியிலும் இவ்வாறு சிவாலயம் அமைக்க புலம்பெயர் தேசத்தவர்கள் மற்றும் பற்றாளர்கள் முன்வர வேண்டும். எதிர்வரும் காலங்களில், இம் முயற்சிகள் நிறைவேருவதற்கு சங்கமன் கண்டி சிவனின் திருவருள் கைகூடட்டும்.

**“புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கள் தாளே புந்திவைத் திட்டு
இகழ்மின் எல்லா வல்லலையும்
இனியோ ரிடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன் தாள் வணங்கி நாம்
நிகழுமடியார் முன் சென்று
நெஞ்ச முருகி நிற்போமே.”**

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்**


**திருச்சிற்றம்பலம்.**

# புலம்பெயர் சூழலிலே சைவசமயம் எதிர்கொள்கின்ற சவால்களும் வாய்ப்புக்களும்

பாகம் 2



நியூசிலாந்து
சிற்சபேசன்



**முற்பகுதிச்சுருக்கம்:** சிவனை முழுமுதல் கடவுளாகக் கொண்ட வழிபாட்டு முறையே சைவசமயம் என்பதை **“தென்னாடுடைய சிவனே போற்றி”** என்னும் மாணிக்கவாசகரின் வரிகளை மேற்கோள்காட்டி வியாக்கியானம் செய்யப்பட்டது. **“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்”** என்னும் திருமந்திரப்பாடலை ஆதாரமாக்கி சைவசமயம் ஒரு வாழ்க்கைமுறை என்பது பதியப்பட்டது. புலம்பெயர்சூழலிலே சைவசமயம் எதிர்கொள்கின்ற சவால்களையும் வாய்ப்புக்களையும் வெளிக்கொணரவேண்டியதன் நோக்கம் வரையறுக்கப்பட்டது. அந்நியப் படையெடுப்புக்கள், களப்பிரர்கள், பல்லவர்கள் போன்றோரின் வருகை, சமணம்-பௌத்தம் போன்ற பிறசமயப்பரவல், பத்தி இயக்கம், கட்டிடக்கலையில் ஏற்பட்ட திருப்புமுனை என்பவை ஆராயப்பட்டன.

**(சென்ற திங்கள் தொடர்ச்சி)**

புலம்பெயர்சூழலிலே சைவசமயம் எதிர்கொள்கின்ற சவால்களையும் வாய்ப்புக்களையும் ஆராய்வதற்கான தேடலிலே கடந்தகாலங்களைப் பார்த்து வருகின்றோம். அந்தவகையிலே, பத்தி இயக்கத்தையொட்டிய காலப் பகுதியை விரிவாகப் பார்ப்போம்.

அந்நியப் படையெடுப்புக்களைத் தொடர்ந்து சமணம், பௌத்தம் உள்ளிட்ட சமயங்கள் எழுச்சியடைந்தன. மகேந்திரபல்லவன் என்னும் சமணசமயத்தைச் சேர்ந்த மன்னனே திருநாவுக்கரசுநாயனாரை துன்புறுத்தினான். விடம்கலந்த உணவைக் கொடுத்தனர். மதம்பிடித்த யானையை ஏவினர். கல்லிலே கட்டிக் கடலிலே விட்டனர். சுண்ணாம்பு அறையில் அடைத்தனர். **“மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசன் எந்தை இணையடி நீழலே”** என்று பாடிய திருநாவுக்கரசரின் மனவுறுதி மன்னனை அச்சுறுத்தியது.

இத்தகைய காலகட்டத்திலே பத்தி இயக்கத்தின் வளர்ச்சி பரவலான கவனத்தைப் பெற்றது. சமணமும் பௌத்தமும் துறவைப் போதித்தன. அதனால், இல்லறவாழ்வுக்கு சைவசமயம் வழங்கிய முக்கியத்துவம் கவனத்தைப் பெற்றது. சைவசமயம் துறவிகளுக்கு மட்டும் உரியதல்ல என்பதுவும், வாழ்வியல் இன்பங்களுக்கு சைவசமயம் வழங்கிய முன்னுரிமையும் பிரமிப்பை ஏற்படுத்தின. சைவசமயத்தில் காணப்பட்ட தனிமனிதசுயாதீனம் அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போலாகியது. அந்தவகையிலே, சைவசமயம் ஒரு மதமல்ல. அஃது ஒரு வாழ்க்கைமுறை என்பதை மதம் மாறியவர்கள் கூட உணரத்தொடங்கினர். அதனால் சைவசமயத்தை தழுவுவோர் அதிகரித்தனர்.

பாசுபதம், காபாலிகம், காளாமுகம் உள்ளிட்ட சைவசமயத்தின் உட்பிரிவுகளில் சமணருக்கு ஏற்கெனவே ஈடுபாடு காணப்பட்டது. பத்தி இயக்கத்தின் எழுச்சியினால் பல்லவமன்னர்களும் ஈர்க்கப்பட்டனர். சைவசமயத்தைத் தழுவினர். அப்பர் சுவாமிகளுக்கு சொல்லொணாத் துன்பங்களை ஏற்படுத்திய மகேந்திர பல்லவனும் சைவசமயத்தைத் தழுவினான். அந்நியர் வருகை, பிறசமயப்பரவல் எனச் சைவசமயம் எதிர்கொண்ட சாவல்களிலிருந்து வாய்ப்புக்கள் உருவாகின. சைவப்பாரம்பரியத்தின் கட்டிடக்கலையில் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

சைவசமயத்தில் குடைக்கோயில் அமைக்கும் மரபை மகேந்திரபல்லவன் அறிமுகப்படுத்தினான். அந்தவகையிலே, சைவசமயத்தில் குடைக்கோயில் அமைப்பதில் பல்லவமன்னர் முன்னோடியானார்கள். அதுவே, காலபோக்கில் கற்களைப் படிமானம் செய்து கட்டிடமாகக் கட்டுகின்ற மரபாகியது.

கவின்கலைகளே இனிமையான அனுபவத்தை ஏற்படுத்துவனவாகும். அதிலே, ஓவியம், சிற்பம், கட்டிடம், நடனம், நாடகம் என்பவை காட்சிக் கலைகளாகும். அத்தகையவற்றிலே கட்டிடக்கலை நேரடியான பயனைத் தருவதாகும். ஒருமக்கள் குழுவின் நாகரீக வளர்ச்சியையும், வரலாற்றுப் பரிமாணங்களையும் கட்டிடக்கலையே வெளிப்படுத்துகின்றது. அத்தகைய கட்டிடங்கள் சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக அமைதல்வேண்டும். கட்டிடநிர்மாணத்திற்கு பயன்படுகின்ற பொருள்கள் உறுதியாக அமைதல்வேண்டும். கட்டிடங்களுக்குப் பொருத்தமாகவும், நீடித்து நிற்பவையாகவும் இருக்க வேண்டும். கூடவே, கட்டிடம் பார்வைக்கு அழகனுபவத்தால் இனிமையை ஏற்படுத்தக்கூடியதாகவும் அமைதல் வேண்டும்.

சைவப்பாரம்பரியத்தின் கட்டிடக்கலை மரபிலே மண், மரம், செங்கல், சுண்ணாம்பு போன்ற மூலப்பொருட்களே பயன்படுத்தப்பட்டன. அவை காலத்தைக் கடந்துநிற்கும் வல்லமையைக் கொண்டிருக்கவில்லை. அதனாலேயே, சங்ககாலத்திலும், சங்கமருவியகாலத்திலும் உருவாகிய கட்டிடங்கள் காலத்தைக் கடந்து நிற்கவில்லை.

பாறைகளைக் குடைந்து குடைக்கோயில் அமைப்பது சமணமரபாகும். அஃது காலத்தைக் கடந்து நிற்கும் வல்லமை கொண்டதாகும். அதுவே கல்லைக் குடைந்து சைவக்கோயிலமைக்கும் மரபுக்கு வழிவகுத்தது. காலப்போக்கில் கருங்கற்களைப் படிமானம் செய்து கட்டிடங்களை அமைக்கும் மரபாகியது.

சைவசமயத்திலே, பல்லவர்களின் கட்டிடக்கலை பரவிய காலகட்டத்தில் இரண்டு வகையான கோயில்கள் உருவாகின. ஒன்று, சமணமரபின் தழுவலாக மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட குடைக்கோயிலாகும். மற்றையது, மலைக்கோயில் பாணியில் கல்லைக் குடைந்து கட்டப்பட்ட கோயிலாகும்.

பல்லவர்கள் அமைத்த குடைக்கோயில் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் காணப்படுகின்றன. அவற்றிலே பல்லாவரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம், சிங்கப்பெருமாள்கோயில், அரகண்டநல்லூர், திருச்சிராப்பள்ளி, சித்தன்னவாசல், திருமெய்யம் உள்ளிட்ட இடங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.


திருக்கழுக்குன்றத்திலே வேதகிரிமலையில் உச்சிக்கோயில் உள்ளது. மலைக்கோயிலிலிருந்து கீழிறங்கி வருகின்ற வழியிலே, மலைநடுவில் கிழக்குத் திசைநோக்கியதாக, மகேந்திரவர்மனால் அமைக்கப்பட்ட மண்டகப்பட்டுக் கோயில் உள்ளதாகும். அங்கே அரி, அரண், அயன் ஆகிய மும்மூர்த்திகளுமே தனித்தனிக் கருவறைகளிலே எழுந்தருளப் பட்டுள்ளனர். சமணமரபிலே மலைப்பாறைகளைக் குடைந்து உருவாக்கப்பட்ட குடைவரைக் கோயில் வகையில், சைவசமயத்திலான முன்னோடி மண்டகப்பட்டுக் கோயிலாகும்.

காஞ்சிபுரத்திற்கு அருகே ‘கூரம்’ என்னும் ஊரிலே முதலாம் பரமேசுவரன் காலத்திலே சைவக்கோயில் அமைக்கப்பட்டது. அதுவே பல்லவர் காலத்துக் கட்டிடக் கலையில் பழமையானது என்று சொல்லப்படுகின்றது. அதனுடைய கீழ்ப்பகுதி மட்டுமே தற்போது எஞ்சியுள்ளதாகும். பரமேசுவரனின் மகனான இராசசிம்மன் காலத்திலேயே கட்டுமானக் கோயில்கள் தோன்றின.



கற்களைக் கடைந்து கட்டப்பட்ட கோயில்களில் குறிப்பிட்டுச் சொல்லப்படுவது திருவதிகை வீரட்டானத்துச் சிவன் கோயிலாகும். தென்னாடுடைய சிவனாரின் வீரம் வெளிப்பட்ட எட்டுத் திருத்தலங்களே **“எண் வீரட்டானம்”** எனப் போற்றப்படுகின்றன. அதிலேயும் கூட, அதிகமாக வீரம் வெளிப்பட்டதனால், அதிகை வீரட்டானம் என்பதாக திருவதிகை வீரட்டானம் விதந்து போற்றப்படுகின்றது. அங்கே கோயிலின் கீழ்பகுதி கல்லாலே அமைக்கப்பட்டிருக்கின்றது. மேற்பகுதி செங்கல்லினாலே அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சுதை வேலைப்பாட்டையும் கொண்டிருக்கின்றது. பல்லவன் பரமேசுவரன் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டதாகும். அதனுடைய கட்டிடக்கலையின் கலைநயம் கண்கொள்ளாக் காட்சியாகும். நிருபதுங்கன் காலத்தில் மேலதிக திருப்பணிகள் நடைபெற்றன.

திருஞானசம்பந்தருக்கு இறைவன் திருநடனக்காட்சியளித்த தலமே திருவதிகை வீரட்டானமாகும். திருநாவுக்கரசரின் தமக்கை திலகவதியார் இத்தலத்திலேயே சரியைத் தொண்டாற்றினார். தம்பியாகிய மருள்நீக்கியாரை



நல்வழிப்படுத்துமாறு இறைவனை இறைஞ்சினார். **“சூலை தந்து ஆட்கொள்வோம்”** என்று இறைவன் கனவில் தோன்றியருளினார். அப்போது அப்பர் சுவாமிகள் சமணமடத்தில் தங்கியிருந்தார். சூலைநோயினால் துடித்தார். சமணரால் குணமாக்கமுடியவில்லை. அதனால், சமண மடமிருந்த பாடலிபுத்திரத்திலிருந்து (திருப்பாதிரிப்புலியூர்) புறப்பட்டார். திருவதிகை வீரட்டானம் வந்துசேர்ந்தார். சிவனை மனமுருகி வணங்கினார். “**இரவும்பகலும் பிரியாது வணங்குவன்**” என்னும் வரிகளைக்கொண்ட தேவாரத்தைப் பாடி சூலைநோய் நீங்கப் பெற்றார்.

பெரும் கற்பாறைகளைக் குடைந்து ஒற்றைக்கல் கோயில்களைப் பல்லவர் அமைத்தனர். பல்லவர்களின் கட்டிடக்கலைப் பாணியை மேன்மேலும் வளர்த்ததிலே சோழர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன், பாண்டியர், சேரர், முத்தரையர், அதியமான், கீழைச்சாளுக்கியர் எனப் பல்வேறு மன்னர்களும் பல்லவர் கட்டிடக் கலையின் கூறுகளை உள்வாங்கி கோயில்கள் அமைத்தனர். அந்தவகையிலே, கலைநுட்பத்துடன் காலத்தைக் கடந்து நிற்கும் வகையில் அமைக்கப்பட்ட கோயில்களே, தமிழ் பண்பாட்டின் முக்கிய கூறுகளாகின. தஞ்சைப் பெரியகோயில், இராமேசுவரம், சிதம்பரம் நடராசர் கோயில், பழனி தண்டாயுதபாணி மலைக்கோயில், திருவில்லிபுத்தூர், திருவரங்கம் (ஸ்ரீங்கம்), திருவீழிமிழலை, திருமுல்லைவாயில் மாசிலாமணீசுவரர் கோயில், திருவையாறு ஐயாறப்பர் கோயில் எனப் பண்பாட்டுச் சான்றுகள் பரந்துவிரிந்த நிலப்பரப்பிலே காணப்படுகின்றன.


இவ்வாறாக, சைவசமயத்தின் கட்டிட மரபில் பெறுமதியான மாற்றம் ஏற்பட்டமைக்கு பல்லவக் கட்டிடக்கலை முக்கிய பங்களித்திருக்கின்றது. படையெடுப்பின் மூலம் மண்ணைப் பிடிக்க வந்தவர்கள். மண்ணின் மரபுகளை மாற்ற முனைந்தனர். சமணம், பௌத்தம் எனப் பிறசமயங்களைப் பரப்பினர். சைவசமயத்தை அழித்துவிட்டதான தோற்றப்பாட்டையும் ஏற்படுத்தினர். ஆனால் அஃது கானல் நீராகியது.

அழிந்துபோவதற்கு சைவசமயம் ஒரு மதமல்லவே. அடியும் முடியும் காணமுடியாதவனை **“தென்னாடுடைய சிவனே போற்றி”** என்று வணங்கும் மரபல்லவா. **“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந் தொழும்”** என இறைவனுக்கு வரைவிலக்கணம் சொல்கின்ற பண்பாடல்லவா. மரம், கல், சமுத்திரம், ஆறு என இயற்கையிலே இறைவனைக் காண்கின்ற வாழ்க்கை முறையல்லவா. அஃது அழிக்கப்பட முடியாதது என்பதல்ல. சைவசமயத்திலே அழிக்கப்படுவதற்கு ஒன்றுமில்லை என்னும் யதார்த்தமே வெளிப்படுகின்றது. கூடவே, அழிக்க நினைத்தவர்களையும் உள்வாங்குகின்ற அன்பும் பண்பும் மிளிர்கின்றன. பிறசமயப்பரவல் என்னும் சவாலை, கட்டிடக்கலையின் மறுமலர்ச்சிக்கான சந்தர்ப்பமாக்கிக் கொண்ட போது, சைவசமயத்தின் உள்ளார்ந்தசக்தி பொங்கிப்பிரவாகிக்கின்றது. **(வளரும்)**

திருச்சிற்றம்பலம்

# தென்னாட்டு நிகழ்வுகளும் படைப்புகளும்





ஆவணி நிறைமதிப் பூசைகள் மற்றும் தென்னாடு வெளியீடு



அடியாரைத் தேடி

91 வயதான மதுரை குருசாமி ஓதுவார்



தென்னாடு விதிமாற்றும் விரிசடையான் காணொளிப் படப்பிடிப்பு




ஆவணிக் கழுவாய் வழிபாடு (பிரதோசம்)



மயிலாப்பூர் சற்குருநாதன் ஓதுவார்



சொ.சொ.மீ சுந்தரம் ஐயா
தென்னாடு திருவாசக முன்னுரை
காணொளிப் படப்பிடிப்பு







தென்னாடு மடத்தினால் செந்தமிழ் ஆகம முறையில் மங்கள நாண் அணிவிப்பு






ஆவணிக் கணபதி வளர்பிறை நான்மைப் பிறைநாள் வழிபாடுகள் (சதுர்த்தி)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் பன்னிரண்டாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு” , சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு வண்பண்ணை தயா அச்சகத்தில் அச்சிடப்பட்டு கன்னி நல்லோரை புரட்டாசித் திங்கள் 4ம் நாள் நிறைமதி அன்று (20-09-2021 திங்கட்கிழமை ) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம்.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 75 653 3111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org